விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 23 திங்கட்கிழமை (08.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354




# புலிகளுடன் யுத்த நிறுத்தத்துக்கு இந்திய அரசு வலியுறுத்தாது!

## இராணுவத் தளபதி நம்பிக்கை



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கம் வலியுறுத்தாது என இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## போதனா வைத்தியசாலையில் மீண்டும் 'பாஸ்' நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளரை பார்வையிடச் செல்பவர்கள் பாஸ் வைத்திருக்க வேண்டும் என்ற நடைமுறை நேற்று முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளியின் பெயரில் பாஸ் வழங்கப்படும்.

அப் பாஸை பயன்படுத்தி பார்வையாளர்கள் அனுமதிக்கப்படும் நேரங்களில் உறவினர்கள் இருவர் மட்டும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்.

முதலில் சென்ற இருவரும் வெளிநோயாளர் பகுதிக்கு வந்த பின்னர் அப்பாஸைப் பயன்படுத்தி ஏனைய இருவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதற்கென வெளிநோயாளர் பகுதிகளில் பொலிஸாரும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கை வைத்தியர்களின் பாதுகாப்புக் கருதியே (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி வருவதற்கு முன் இராணுவ வெற்றிக்கு அரசு முனைப்பு

(கொழும்பு)

புதுடில்லியின் அழுத்தம் காரணமாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டுள்ள இலங்கை அரசாங்கம் அதற்கு முன்னர், ஏதாவது ஒரு இராணுவ வெற்றியை பெற்றுவிட வேண்டும் என்ற முனைப்பை மேற்கொண்டு வருவதாக த நேசன் செய்தித்தாள் தனது அரசியல் கட்டுரையில் தெரிவித்துள்ளது.

பௌத்த பிக்குகளின் கட்சியான ஜாதிக 'ஹெல உறுமயவும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும் இந்திய அழுத்தத்தை அடுத்து, யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கி வந்துள்ள நிலையில் இந்த முனைப்பை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதி கடந்தவாரம் புதுடில்லிக்கு சென்று திரும்பிய பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வருவார் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் ஒரு முக்கிய முயற்சியாகவே கருதப்படுகிறது.

இதேவேளை நடைமுறை யுத்தமானது, இலங்கை ஜனாதிபதிக்கு மக்கள் மத்தியில் முழுமையான ஆதரவை பெற்றுக் கொடுத்துள்ளமையால் அந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகிறோம்

க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை வாழ்த்துகிறோம்

கல்விப்பகுதி
வலம்புரி

## முள்ளியவளை நோக்கி தொடர் எறிகணை வீச்சு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து படையினர் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலை நடத்தி வருவதாக வன்னித் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தின் புயல் அச்சம் நீங்கியது

(கொழும்பு)

கிழக்கு கடலில் மையம் கொண்டிருந்த தாழமுக்கம் குறைந்த அழுத்தமாக இலங்கையை கடந்து செல்வதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த தாழமுக்கம் கிழக்கு மாகாணத்தை புயலாக தாக்கும் என எச்சரிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அந்த புயல் எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மன்னார், யாழ்ப் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று கடுமையான சோதனை

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய இடங்களில் நேற்று காலை தொடக்கம் மாலை வரை கடுமையான சோதனை நடைபெற்றது.

பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களும் மற்றும் முகவரிகளும் பதிவு செய்யப்பட்டன.

தேசிய அடையாள அட்டைகளில் உள்ள முகவரிகளும் கொழும்பில் தங்கியுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### ஐ.தே.க. இன்று சமர்ப்பிக்கும்!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளார்.

எரிபொருள் தொடர்பில் அரசாங்கம் ஹெட்ஜின் உடன்படிக்கையை செய்து கொண்டதன் மூலம் நாட்டுக்கு 400 மில்லியன் டொலர் (12ஆம் பக்கம் பார்க்க)

அசுத்தமான கைகள் ஆரோக்கியத்தின் முதல் எதிரி!

அசுத்தமான கைகளில் ஆயிரக்கணக்கான கிருமிகள் இருக்கும். அவற்றினால் பல தொற்று நோய்கள் ஏற்படலாம்.

*எப்போதெல்லாம் கட்டாயமாகக் கைகளைக் கழுவ வேண்டும்?*

✦ சாப்பிட முன்னர் ✦ சமைக்க முன்னர் ✦ மலகூடம் சென்று வந்த பின்னர் ✦ பிள்ளைகளுக்கு உணவூட்ட முன்னர்

– ஓடும் நீரில் கைகளை நன்கு சவர்க்காரமிட்டு கழுவுங்கள்.

– நகங்களினடியில் படியும் அழுக்கில் ஆயிரம் கிருமிகள் காணப்படும்.


– எனவே நகங்களைக் கிரமமாக வெட்டி சுத்தமாக வைத்திருங்கள்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை CARE International

(C-1814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெற்ற 2008ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினர் சகிதம் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்படுவதையும் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி க.தேவராஜா மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள்: எ.ரம்சன்ராஜ்

# மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று

(கொழும்பு)

வரவுசெலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்புக்கள் இன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் 15ஆம் திகதி இடம் பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பின் போது 42 மேலதிக வாக்குக்களால் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் இன்று நடைபெறும் வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சி வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளது. இதுதவிர ஜே.வி.பி. மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் எதிராக வாக்களிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் 12 உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனநாயக உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு தரும் ஏனைய கட்சிகளும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு தரமுன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பெருந்தோட்ட தொழிலாளர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக அரசாங்கம் விசேட அறிவித்தல் ஒன்றை விட தவறும் பட்சத்தில் வரவு செலவுத் திட்டத் திற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திர சேகரன் தெரிவித்தார்.

இது தவிர முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் ஹசன் அலி கருத்துத் தெரிவிக்கையில், இன்று முற்பகல் நடைபெறவுள்ள குழுக் கூட்டத்தின் பின்னரே வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களிப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

(எ-5)

# தொண்டர் ஆசிரியர் சங்க அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்க அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் சமுகம்தந்து தமது அங்கத்துவத்தை பட்டியலில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

(ச-3)

# பாகிஸ்தான் பெஷாவர் அருகே மாபெரும் தாக்குதல்

பாகிஸ்தானின் பெஷாவர் நகருக்கு சற்று வெளியே நடத்தப்பட்ட மாபெரும் தாக்குதல் ஒன்றில் ஆப்கானிஸ்தானில் இயங்கும் அமெரிக்கப் படைகளுக்கான போக்குவரத்து முனையங்கள் இரண்டை ஆயுததாரிகள் நாசமாக்கியுள்ளனர்.

இதில் பெருமளவான இராணுவ ட்ரக் வண்டிகள் அழிக்கப்பட்டன. பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டார். 300க்கும் மேற்பட்ட இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் இந்த திடீர் தாக்குதலில் ஈடுபட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போர் முனைத் தாக்குதல் வாகனங்கள் உட்பட இராணுவத்தினருக்கு தேவையான பொருட்களுடன் தயாராக நின்ற 200 கண்டெயினர்களை இவர்கள் அழித்தார்கள் என்றும் ராக்கெட்டுகள், எறிகுண்டுகள், தானியங்கி ஆயுதங்களையும் பயன்படுத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டு துருப்பினருக்கான பிரதான விநியோகப் பாதையின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் மிகவும் துணிச்சலான தாக்குதல் இதுவாகும்

(ச)

# 45 ஆயிரம் குடும்பங்கள் கிளி.யில் வெள்ளத்தால் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரச உதவிகள் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட 56,552 குடும்பங்களில் 45ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச செயலக விபரம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை படையினரின் வான் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல்களினால் உயிரிழக்கும், படுகாயமடைந்து பாதிக்கப்படுபவர்களுக்கான அரச இழப்பீடுகள் கிடைப்பதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரின் தாக்குதலிகளினால் பாதிக்கப்படும் மக்களின் விபரங்கள், கிராம அலுவலர்கள் ஊடாக திரட்டப்பட்டு கிளிநொச்சி அரச செயலகம் இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வருகின்ற போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் நீண்ட காலமாக இழப்பீடுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

# சமரச மார்க்கத்தை உணர்த்திய அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா



நீதிக்கு மாறாய் நில்லாதே- நடு
நிலை நெறி தவறிச் செல்லாதே
சாதி சமய வகை கூறாதே- உன்
சமரச மார்க்கத்தை மாறாதே

-அருட்கவி சீ.விநாசித்தம்பி

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணன் தேவஸ்தான பரிபாலகராகவும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆன்மிக வழியில் உடல் உள நோய்களை தீர்த்தும் அவர்கள் ஆன்மிக ஈடேற்றம் பெறுவதற்கும் வழிகாட்டிய மகான் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா சிவப்பேறு அடைந்து இன்று மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இருந்தும் அவரது அடியார்களின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

-அடியார்

# இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் அமரர் ந.ஜெயத்திலகன் ஞாபகார்த்தமாக நடைபெற்ற 6 பேர் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க போசகர் குழந்தை சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் மோ.சாந்தசீலன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வித்துறைப் பணிப்பாளர் க.கணேசநாதன் ஆகியோர் கலந்து கொள் கின்றனர்.

கௌரவ விருந்தினர்களாக திருநெல்வேலி மேற்கு கிராம சேவையாளர் ஆர்.யேசுதாசன் மற்றும் திருமதி வி.ஜெயத்திலகன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.





வண்ணார்பண்ணை சென். பீற்றர்ஸ் கில்னர் பாடசாலையில் நடைபெற்ற ஒளி விழாவில் மாணவர்களின் இசை நிகழ்வுகளை முதலிரு படங்களிலும். நிகழ்வின் முடிபில் கிறிஸ்மஸ் தாத்தா, மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதை மற்றைய படத்திலும் காணலாம்

(படங்கள்: சுரேஷ்)

## இன்று ஒரு தகவல்

# சார்லி சாப்ளின்

ஒருவர் உயிருடன் இருக்கும்போதே அவரைக் கடத்திக் கொண்டுபோவது வழக்கம்.

அவரைக் கொண்டு பொய் எங்கேயாவது மறைத்து வைத்துக்கொண்டு சொந்தக்காரர்களை மிரட்டி பணம் கேட்பார்கள்.

ஆனால் ஒருவர் இறந்த பின்பும் கூட அவரைக் கடத்திக் கொண்டுபோய் மறைத்து வைத்து பணம் கொடுத்தால்தான் உடலை திருப்பிக் கொடுப்பேன் என்று சொல்லி எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி உலகத்திலுள்ள முக்கிய பத்திரிகைகளெல்லாம் முதல் பக்கத்தில் ஒரு முக்கியமான செய்தி வெளியிட்டிருந்தன.

உலகத்தின் தலைசிறந்த நகைச்சுவை மன்னர் சார்லி சாப்ளினின் உடல், புதைக்கப்பட்ட இடத்திலிருந்து காணாமல் போய்விட்டது என்பதுதான் அந்த செய்தி.

1977 முடிவில் அவர் இறந்தார். புதைக்கப்பட்டு ஒருசில மாதங்களிலேயே அவரது உடல் காணாமல் போய்விட்டது.

உலகம் முழுவதும் ஒரே பரபரப்பு அவரின் உடலை யார் கடத்திக்கொண்டு போயிருப்பார்கள்? யாருக்கும் ஒன்றும்புரியவில்லை.

சார்லி சாப்ளின் இறந்தபின் தனது உடல் தனது தாய்நாடான இங்கிலாந்தில் தான் புதைக்கப்படவேண்டும் என்று விரும்பினார்.

ஒருவேளை அவரது விருப்பத்திற்கு மாறாக சுவிஸ்ஸர்லாந்தில் அவரை அடக்கம் செய்தமை அவருடைய ரசிகர்களுக்குப்பிடிக்கமால் போயிருந்தது. அதனால், அவர்கள் யாராவது கடத்திக்கொண்டு போயிருப்பார்களோ?

இது ஒரு சந்தேகம்.

ஒருவேளை சார்லி சாப்ளினின் தீவிர ரசிகர்கள் அவரை விட்டுப் பிரியமனமில்லாமல் தங்களுடனேயே வைத்திருக்கவிரும்பி எடுத்துக்கொண்டு போயிருப்பார்களோ?

இப்படியும் ஒரு சந்தேகம்.

இதற்கெல்லாம் 1978ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி விடை கிடைத்தது.

இது சம்பந்தமாக கானெவ், வார்தாஸ் என்ற இருவரை பொலிஸார் கைதுசெய்தார்கள். இவர்கள் இருவரும் கிழக்கு ஐரோப்பாவை சேர்ந்தவர்கள்.

அவர்கள் பணத்திற்காகத்தான் அந்த உடலைக் கடத்தினார்கள் என்பது தெரியவந்தது. சார்லி சாப்ளினின் உடலைக் கடத்திக்கொண்டு போய் வைத்துக்கொண்டு அதிகமாக பணம் கொடுத்தால்தான் அதை திருப்பிக்கொடுப்போம் என்று அவருடைய உறவினர்கலை மிரட்டியிருக்கிறார்கள்.

உறவினர்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வருவதற்குள் பொஸில் அவர்களை கைதுசெய்தது. கிட்டத்தட்ட 15 மையிலுக்கு அப்பால் இருந்து அவருடைய உடல் மீட்கப்பட்டது.

மறுபடியும் பழைய இடத்திலேயே புதைத்தார்கள். சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா ஏரியின் அருகில் உள்ள ஒரு இடுகாட்டில் 1978ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி சார்லி சாப்ளின் இரண்டாவது தடவையாக புதைக்கப்பட்டார்.

இதுபோலவே இறந்த பின்பும் பெறுமதி குறையாமல் இருப்பவர்களும் இந்த உலகத்தில் உண்டு.

உயிருடன் இருக்கும் போதே பெறுமதியே இல்லாமல் இருப்பவர்களும் உண்டு.

நம்ம ஆள் ஒருவரை திடீரென ஒரு நாள் சில பேர் கடத்திக்கொண்டு போய் வைத்துக் கொண்டு அவருடைய மனைவிக்கு போன் பண்ணி "10 ஆயிரம் ரூபா கொடுத்தால் தான் உங்கள் கணவரை விடுவிப்போம்!" என்றார்கள்.

அதற்கு அவருடைய மனைவி "நான் உங்களுக்கு 20ஆயிரம் ரூபா தருகிறேன். அவரை வெளியில் விட்டு விடாதீர்கள் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு

# நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில்

## கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 530 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படாமல் 530 தொண்டர் ஆசிரியர்கள் கடமை யாற்றி வருகின்றனர்.

இவர்களில் இவ் வருட ஆரம்பத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 171 தொண்டர் ஆசிரியர்களுக்கு மாத்திரமே நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டது.

எனினும் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 530 தொண்டர் ஆசிரியர்களுக்கும் முழுமையாக நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவேண்டுமென வடக்கு மாகாண விசேட செயலணித் தலைவரும் சமுக சேவைகள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 530 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்வி அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவிற்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனிற் குமிடையே சந்திப்பொன்று கடந்த 5ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதில் நியமனம் வழங்கப்படாது மீதமாகவுள்ள 359 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான அனுமதியை விரைவில் அமைச்சரவையில் பெற்றுத் தருவதாக கல்வி அமைச்சர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் உறுதியளித்துள்ளார்.

இதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 530 தொண்டர் ஆசிரியர்க ளுக்கும் விரைவில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படு மென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் நம்பிக்கை தெரிவித்தார். (5)

# ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு முரண்பாடுகளை நீக்க புதிய சுற்றுநிருபம்

## ஜனவரியில் வெளிவரும் என்கிறார் அமைச்சர்

(காரைநகர்)

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் முரண்பாடு காணப்படுவதாக ஆசிரிய தொழில் சங்கங்கள் அடிக்கடி கூறி வருகின்றன.

அது மாத்திரமல்லாமல் பிரமாணக்குறிப்பை அமுல்படுத்துவதிலும் கல்வி அலுவலகங்களிடையேயும் மாறுபட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருவது மற்றுமொரு அநீதியாக இருக்கின்றது.

இந்நிலையில் இவற்றுக்கெல்லாம் தீர்வாக ஜனவரியில் புதிய ஆசிரியர்சேவை சுற்ற நிரூபம் வெளிவருவதாகவும் அது அனைத்து முரண்பாடுகளையும் களையுமெனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார்.

ஆசிரியர் பிரமாணக் குறிப்பிலேயே முரண்பாடுகள் காணப்பட்டு ஆசிரியருடைய சரியான சேவைக் காலம், புள்ளி, வகுப்பு என்பன வழங்கப்படாத நிலையில் கிழக்கில் அண்மையில் பொதுச் சேவை ஆணைக்குழு நடத்திய பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சையில் வகுப்பு 1 இல் 8 வருட சேவையை அறுதியாகக் கோரியிருப்பது நியாயமாகாது. எனவே புதிய சுற்று நிருபத்திற்குப்பிற்பாடு அதற்கான தெரிவு இடம்பெற வேண்டுமென ஆசிரிய தொலிற் சங்கங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. (5)

## இராசி பலன்

08.12.2008
(கார்த்திகை 23, திங்கட்கிழமை)
ரேவதி முன்னிரவு 10.23 மணிவரை
தசமி முற்பகல் 8.47 மணிவரை
இராகுகாலம் 7.48-9.18மணிவரை
சுபநேரம் 12.18-1.48 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, சயனசுகக்குறைவு, கோபப்படுதல், காரிய அலைச்சல். |
| இடபம் | செய்தொழில் விருத்தி, குடும்ப மிழ்ச்சி காரிய அனுகூலம், பெருமை யடைதல். |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, புதிய தகவல், முயற்சி கைகூடும் |
| கடகம் | உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய முயற்சி, திடீர் பயணம். |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு, வீண்தொல்லை, காரிய தடங்கல், போசன சுகம். |
| கன்னி | அபூர்வ சந்திப்பு, செல்வாக்கு, காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| துலாம் | பணவருவாய், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும் பயணம். |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, மரியாதைக் குறைவு, முயற்சிதாமதம், பணவிரயம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், ரோகநிலை, முயற்சிதாமதம். |
| மகரம் | கூட்டு முயற்சி, சகோதரர்கள் வழி நன்மை, விருந்துபசாரம், அந்நியர் சந்திப்பு. |
| கும்பம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு, பணவிரயம். |
| மீனம் | தெய்வ சிந்தை, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, ஜனவசியம் |

வளவன்

# 2009 ஆம் ஆண்டு ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

2009ஆம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்கும் திகதிகளை ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் ஜனவரி -8 ஆம் திகதி, பெப்ரவரி 12 ஆம் திகதி, மார்ச் -12 திகதி, ஏப்ரல்-8ஆம் திகதி , மே-06 ஆம் திகதி ஜூன்-11 ஆம் திகதி, ஜுலை-09 ஆம் திகதி, ஆகஸ்ட் -12 ஆம் திகதி, செப்ரெம்பர் -10 திகதி, ஒக்டோபர் 07 ஆம் திகதி, நவம்பர்-11 ஆம் திகதி, டிசெம்பர்-10 ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (5)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இந்து மன்றக்கலை விழாவில் அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் மாணவியொருவருக்குப் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (பரு.நிருபர்)

# ஆங்கில போட்டி 12ஆம் திகதி நடைபெறும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையேயான ஆங்கிலப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம்திகதி வெள்ளிக்கிழமை நகரசபை மண்டபத்தில் நடைபெறுமென சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டி ஏற்கனவே நடாத்தப்பட அறிவிக்கப்பட்ட போதும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-29)

# பரிசூதிய சேமிப்புத் திட்டத்தில் மூவருக்கு பணப் பரிசில்

(பருத்தித்துறை)

புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்க பரிசூதிய சேமிப்பு திட்ட லொத்தர் மூலம் 50 ஆயிரம் ரூபாவை அல்வாயைச் சேர்ந்த தவயோகம் ரமணன் பரிசாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் துன்னாலையைச் சேர்ந்த வி.கேதீஸ்வரன் 25 ஆயிரம் ரூபாவையும் புலோலியைச் சேர்ந்த செல்வி இளமதி சதாசிவமூர்த்தி 10 ஆயிரம் ரூபாவையும் பரிசாகப் பெற்றார். (5-29)

# கல்வியமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு வெளியிடும் 'கூர்மதி' சஞ்சிகைக்கான ஆக்கம் கோரல்

(அல்வாய்)

கல்வியமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு வருடாந்தம் வெளியிடும் 'கூர்மதி' சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான சுய ஆக்கங்கள் கீழ்வரும் விடயங்களைச் சார்ந்ததாக அமைய வேண்டுமெனவும் அத்துடன் கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளை அனுசரித்தே ஆக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு பதில் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

- இலக்கிய இலக்கணம் சார்ந்த கட்டுரைகள்.
- கல்வியியல் சார்ந்த கட்டுரைகள்.
- புராதன நவீன தொழில்நுட்பம் சார்ந்த கட்டுரைகள்.
- மரபுசார்ந்த, சாராத கவிதைகள்.
- சிறுகதைகள், மணிக்கதைகள்.
- சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் துணுக்குகள்.
- வேறு ஏதாவது பயனுள்ள விடயங்கள்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களைக் கருத்தில் கொண்டே ஆக்கங்கள் எழுதப்படல் வேண்டும். அத்துடன் ஆக்கங்கள் சுயமாக எழுதப்பட்டதாகவும் பத்திரிகைத் துறைசார்ந்த சட்ட வரம்புக்குள் விழுமியங்களை அனுசரிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் A4 தாளில் கணனிப் பதிவு செய்யப்படுவதோடு பின்வ ரும் பக்கக் கட்டுப்பாட்டுக்குள் அமைதல் வேண்டும்.

துணுக்குகள் 1/2 பக்கத்துக்கு மேற்படாமலும், கவிதைகள் 2 பக்கத்துக்கு மேற்படாமலும் ஏனையவை 4 பக்கத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தரம் 4 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்புதல் வேண்டும்.

ஆசிரியர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும்போது தாம் ஆசிரியர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அதிபர் அல்லது கவ்விப் பணிப்பாளர் அல்லது சமாதான நீதவான் உறுதிப்படுத்தலாம்.

ஆக்கங்கள் யாவும் ,

மாணவர்களுக்கு 25%, ஆசிரியர்களுக்கு 25%, துறைசார்ந்த நிபுணர்களுக்கு 25%,முத்திரை பதித்த ஆக்கங்களுக்கு 25% எனும் விகிதாசாரத்தில் பிரசுரிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

மாணவர்கள் தவிர்ந்த அனைவரும் தமது ஆக்கங்களை கணனிப் பதிவு செய்து ஒருபக்கத்தில் அதன் சி.டியுடன் அனுப்புமிடத்து ஆக்கங்களில் இடம்பெறும் தவறுகளை தவிர்க்கவும் காலவிரயத்தை தவிர்க்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்கங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதில் பணிப்பாளர், தமிழ்மொழிப் பிரிவு கல்வியமைச்சு, இசுறுபாய, பத்திரமுல்ல என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இவ்வறிவித்தல் இலங்கையில் உள்ள சகல வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-4-19)

# மணவாளக்கோல விழா

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் அமைந்துள்ள அருள்மிகு விறுமர் தேவஸ்தான மணவாளக்கோல விழா நாளை செவ்வாய்க்கிழமை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ உமாசுதன் குருக்கள் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் சமய தீட்சை வழங்கப்படுவதுடன் "மங்கல நாதம்" எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்படும் என ஆலய நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஓ-29)

# க.பொ.த.(சா/த) பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(சாதாரண) தரப் பரீட்சை நடைபெற இருந்த கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலய (நிலைய இலக்கம் 6943) பரீட்சை நிலையமானது கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (5-2)

# உலக விஞ்ஞான தின வினாடி வினா போட்டி

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவர்கள் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.

யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இவ் வினாடி வினாப் போட்டியில் இரண்டாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களும் மூன்றாமிடத்தை கொக்குவில் நாமகள் வித்தியாலய மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். (5-11)

# நிறுத்தற் கருவிகள் முத்திரையிடும் பணி

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பகுதியில் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் முத்திரையிடும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

உடுப்பிட்டிப் பிரதேச சபை அலுவலகத்தில் இப் பணிகள் தொடர்ந்து இன்றும் நடைபெறுவதால் வர்த்தகர்கள் அனைவரும் தவறாது நிலுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு பிரதேசசபை செயலாளர் வி.குலநாயகம் அறிவித்துள்ளார். (5-6-52)



அரசடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழாவில் மாணவர்களின் காவடியாட்டத்தினைப் படத்தில் காணலாம்.




# நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் முடிவுகள்

(நல்லூர்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இவ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி வார நிறைவு விழாவில் வழங்கப்படுமென நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**வலுவிழந்தோர் முச்சக்கர வண்டி ஓட்டம்- பெண்கள்**

இ.தயாநிதி,கா.லதா,வே.வனஜா

**ஆண்கள்**

சே.மோகன்ராஜ்,கா.நாகராஜா

**வலுவிழந்தோர் துவிச்சக்கர வண்டி ஓட்டம் -பெண்கள்**

ஆர்.கிரிஜா,கே.செபமாலை,எஸ்.சசிகலா, சி.தனுமதி, என்.சசிகலா,வி.கஜேந்தினி

**ஆண்கள்**

எஸ்.துஸ்யந்தன்,எஸ்.தனுசன், பொன்னுத்து ரை,எஸ்.பிருந்தாபரன்.

**வலுவிழந்தோர் பாட்டுப் போட்டிகள்**

தே.டயானி,சு.நிர்மலகுமாரி, இ.தயாநிதி, ரி.ஜெனிற்றா.

சபை உத்தியோகத்தர் ஊழியர்களுக்கிடையிலான போட்டிகளில்,

**கரம்போட்டி (ஆண்கள்)**

நா.யோகராசா,மே.சாந்தசீலன், கே.நடேசராஜன்.

**கரம்போட்டி (பெண்கள்)**

சி.கிருஷ்ணமணி,கே.சிவாஜினி, வ.சுதேந்திரா

**கழகங்களுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி**

பொற்பதி சிவகுரு வி.க, முத்துத் தம்பி வி.க.

**மாதர் சங்கங்களுக்கிடையிலான பன்ன வேலைப் போட்டிகள்**

***தடுக்குப் பின்னுதல்***

கா.வையந்திமாலா, செ.அனோஜா, ஜெ.பியூலா

***நீத்துப் பெட்டி இழைத்தல்***

த.மயூலா, த.நிஷாந்தி. (6)

# சட்டவிரோதமாக மதுஉற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மது உற்பத்தி செய்து விற்பனை செய்த நான்கு பேர் கடந்த 2ஆம் திகதி மதுவரித் திணைக்களத்தால் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் அ.ஆனந்தராசா ரூபா 11 ஆயிரத்து 500அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பிரதேசத்துக்குள் சட்டவிரோதமாக மது உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது மேலதிக நீதிவான் அவர்களுக்கு ரூபா 25 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-6)

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 10 வடிகான்கள் திருத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வெள்ளம் வழிந்தோட முடியாதவாறு தூர்ந்து போயிருந்த பத்து வடிகான்களை யாழ். மாநகரசபை ஊழியர்களின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்றிட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபைப் பகுதியிலுள்ள பிரதான வடிகான்களுக்கு மேலாக பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களுக்கு பயன்படுத்தப்பட்ட முட்கம்பி, மண்மூடைகள் போன்றவை வடிகான்களில் போடப்பட்டுள்ளதாலேயே மழை வெள்ளம் ஓடமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலை குறித்து, யாழ்.அரசாங்க அதிபர் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விளக்கியதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடனும் ஒத்துழைப்புடனும், இந்த வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (5)




இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கோப்பாய்ப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நிவாரணம் வழங்குவதையும், அருகில் சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப் பாளரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மாவட்டக் கிளையின் துணைத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-நல்லூர் நிருபர்)

# இலங்கையில் தமிழர் 5

இக் கண்ணோட்டத்தில், இலங்கையின் வரலாறானது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியுடன் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தொடங்கி ஒரு தனிவழிச் சென்ற வரலாறு என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

இதிலே நவீன கால தேசிய வாதத்தின் குரல் ஒலிக்கின்றது. இக் கருத்தின் விளைவாக இலங்கையின் வரலாறு தனியோர் இனக் குழுவின் சொத்தாகவும் காலத்திற்கு காலம் அந்த இனக் குழு தென்னிந்தியாவிலிருந்து வேறு ஓர் இனக் குழுவால் தாக்கப் பட்டதைக் கூறும் வரலாறாகவும் விளங்கப் பட்டது. ஆதிவரலாற்றை ஆய்வுசெய்யும் போது நவீன காலத்திற்கு கருத்துக்களையும் கட்டுமானங்களையும் அவ் வரலாற்றில் காண முனைவது பயனற்ற செயலாகும்.

### பேராசிரியர் பரணவிதான தெரிவித்த கருத்துக்கள்

இலங்கை பல்கலைக்கழகம் 1942 இல் நிறுவப்பட்டபோது இலங்கை வரலாற்றை மிகுந்த அக்கறையுடன் ஆழமாக ஆய்வு செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. முதல் தடவையாக பல்கலைக்கழக மட்டத்தில் இலங்கை வரலாற்றைக் கற்பிப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டன. வரலாற்று ஆய்வில் மேற்கொண்ட முதலாவது மாணவனும் பதிவுசெய்யப்பட்டான்.

எனினும், இலங்கை வரலாற்று விற்பன்னர் என்று கூறக்கூடிய ஒருவர் மட்டுமே வரலாற்றுத் துறையில் செயலாற்றினார். இவர் ஜி.சி.மெண்டிஸ் ஆவார். புதிய பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்று பேராசிரியாக இந்தியாவில் இருந்து வந்த ஒருவர் (பேராசிரியர் ஹேம் சந்த்ர ராய்) கடமை ஏற்றார்.

வரலாற்றுத்துறையில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளோ வெளியீடுகளோ 1950கள் வரை நடக்கவில்லை. எனினும், இதே காலத்தில் தொல்கால இலங்கை பற்றிய ஆய்வுகளை நடத்தி நூல்களை வெளியிடும் பணியில் அரசுத் திணைக்களமான தொல்லியல் ஆய்வுத்திணைக்களம் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது.

அதன் ஆணையாளராக அப்பொழுது ஸெனரத் பரண விதான கடமையாற்றிக் கொண்டிருந்தார். இலங்கையில் தொல்லியல் ஆணையாளர் பதவியைப் பெற்ற முதலாவது இலங்கையர் இவராவர்.

இலங்கைத் தொல்லியலில் ஆழ்ந்த அறிவுபெற்ற, பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்து, வளமுடைய எழுத்தாளராகப் புகழ் பெற்றிருந்த கலாநிதி பரணவிதான தொல்கால இலங் கையைப் பொறுத்த வரையில் ஓர் அதிகாரபூர்வமான அறிஞராகக் கருதப் பட்டார்.

இலங்கையிலிருந்த ஒரேயொரு பல்கலைக்கழகத்தில் அப்பொழுது ஒரு தொல்லியல் துறையே இருக்கவில்லை. பரணவிதானவுடன் ஒப்பிடக்கூடிய ஒருவராவது பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையிலும் இருக்கவில்லை.

இப்படியான நிலையில் 1957 இல் கலாநிதி பரணவிதான தொல்லியல் ஆணையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபோது, இலங்கைப் பல்கலைக்கழகம் அவரைத் தொல்லியல் ஆய்வுப் பேராசிரியராக நியமித்தது. பல்கலைக்கழகத்தில் அனைவரும் அவருக்குப் பெரு மதிப்பு வழங்கினர்.

கலாநிதி பரணவிதான பேராசிரியராக நியமனம் பெற்ற காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்தினர் அதிகாரபூர்வமான இலங்கை வரலாற்று நூல் ஒன்றை எழுதி வெளியிடத் தீர்மானித்திருந்தனர்.

அத்தகைய நூலுக்குப் பதிப்பாசிரியராகக் கடமை ஏற்கப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் எவரும் இருக்கவில்லை. அக் கடமையை ஏற்குமாறு தொல்லியல் பேராசிரியர் பரணவிதான அழைக்கப்பட்டார்.

பேராசிரியர் பரணவிதான அக் காலத்தில் வரலாற்றுக்கால இலங்கையின் தொல்லியல் நிகரற்ற ஓர் அறிஞராக விளங்கினார் என்பதை மறுக்க முடியாது. அத்துடன் அவர் சிங்களக் கல்வெட்டியலில் முன்னணி அறிஞராகவும் கருதப்பட்டார்.

ஆனாலும், இவர் இலங்கைப் பல்கலைக்கழகம் வெளியிடத் திட்டமிட்ட வரலாற்று நூலுக்குப் பதிப்பாசிரியராகச் செயலாற்ற மிகவும் பொருத்தமானவராக இருந்தார் என்று கூறமுடியாது.

காலதாமதமின்றி இந்நூலின் முதற் பகுதியைப் பதிப்பித்து வெளியிட்ட பேராசிரியர், அப்பகுதியின் முக்கிய அத்தியாயங்களையும் தானே எழுதியதால், தன்னுடைய நோக்கிலிருந்து இவ் வரலாற்றை எழுதினார். அவருடைய செல்வாக்கு மேலும் அதிகரித்தது. அவர் எழுதிய வரலாறு அதிகார பூர்வமான வரலாறாகப் பத்தாண்டுகளுக்கு மேல் அங்கீகரிக்கப்பட்டது.

பேராசிரியர் பரணவிதான தெரிவித்த கருத்துக்கள் பலவற்றை பல ஆராய்ச்சியாளர் ஏற்கத் தயங்கினாலும் வெளிப்படையாக அவற்றுக்கு மறுப்புத் தெரிக்க விரும்பவில்லை. பேராசிரியருடைய செல்வாக்கு 1960 களில் மிக உயரிய நிலையை அடைந் திருந்தது.

அதன் பின்னரும் கூட அச் செல் வாக்கு நீடித்தது என்று கூறுவதற்குச் சான் றாக 1970களிலும் பின்னரும் வெளிவந்த இலங்கை வரலாறு பற்றிய வெளியீடுகளில் காணப்படும் கருத்துக்களைக் காட்டலாம்.

**பேராசிரியர்**
**கா. இந்திரபாலா**

பேராசிரியர் பதிப்பித்து வெளியிட்ட இலங்கை வரலாற்று நூலுக்குப் பின், இலங்கைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப் பட்ட இளம் வரலாற்றாசிரியர் சிலர் எழுதிய இலங்கை வரலாறு பற்றிய படைப்புக்களில் பேராசிரியர் பரணவிதான தெரிவித்த கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றிப்பதைக் காணலாம்.

இப்படைப்புக்களில் இலங்கை யின் ஆதிக்குடிகள் பற்றியும் வரலாற்றின் தோற் றம் பற்றியும் கூறப்பட்டுள்ள செய்திகள் பேராசிரியர் பரணவிதான தெரிவித்த கருத்துக்களை ஏற்று எழுதப்பட்டவையாக இருப்பதைக் காணலாம். (தொடரும்)



சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நடைபெற்ற சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுவதையும், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், சாவ. விவசாயப் போதனாசிரியர் க.விஜயகுமார், யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் விவசாயி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும், சிறந்த விவசாயிகளாக கௌரவிக்கப்பட்டவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் :சாவ.நிருபர்)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும் 12

**தி.திருசாந்**
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

### அலுவலக முகாமைத்துவம் (Office Management)

சமூக மட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளில் காரியாலய நிர்வாகமானது அமைப்பின் வளர்ச்சிக்கும் அங்கத்தவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் அம்சமாகவும் அமைகின்றது.



அதற்கேற்ப காரியாலயத்தின் அன்றாட நடவடிக்கைகள் அவற்றிற்கேற்றதான உபகரணங்கள், செயற்பாடுகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்டிருப்பன அவசியமாகும். காரியாலய நிர்வாகத்தில் பின்வரும் அம்சங்கள் அவதானிக்கப்படவேண்டும்.

1. கோவைகளைப் பேணல்.
2. காரியாலய ஒழுங்கமைப்பு.
3. திட்டமிடல்- திட்டங்களைத் தயாரித்து செயற்படல்.
4. கூட்டங்களை நடாத்தலும் அறிக்கைகளைப் பேணலும்.
5. முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
6. அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்களின் தொடர்பு.

### கோவைகளைப் பேணல் (File Management)

அமைப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்களை சரியான முறையில் பேணுதல் அமைப்பின் செயற்பாடுகளின் முக்கியமானதாகும். இது நிர்வாகச் செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மையைப் பேணுதல் (Trasparency), கணக்காய்வு செய்தல் போன்றவற்றிற்கு பயன்படக் கூடியதுமாகும். அதாவது நிறுவனம் அதன் அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்கள் போன்றவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல் தொடர்பான கடிதங்கள், ஒப்பந்தங்கள், உறுதிப் பத்திரங்கள், பற்றுச் சீட்டுக்கள், வவுச்சர்கள் என்பனவும் மாதாந்த அறிக்கைகள், கணக்காய்வு அறிக்கைகள், ஏனைய நிறுவனங்களுடனான தொடர்புகள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பனவும் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்களாகும்.

கோவைப்படுத்தலில் கவனிக்கப்பட வேண்டியவை,

- ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக கோவைகள் பேணப்படல்வேண்டும்.

(உ+ம்) மாதாந்த காசறிக்கை, முன்னேற்ற அறிக்கை, அங்கத்தவர் பட்டியல்

- தேவைப்படும் போது உடனடியாக எடுக்கக் கூடியவாறு ஒழுங்குபடுத்த வேண்டும் .
- எல்லாப் புத்தகங்கள், ஆவணங்கள், கோவைகள் என்பவற்றின் முன்பக்க அட்டையில் எளிதில் வாசிக்கக் கூடிய பெரிய எழுத்துக்களால் பெயரிடப்பட குறிப்பிடப்படுவது சிறந்தது, கோவைகளின் உள்ளடக்க விபரம் முதல் பக்கத்தில் பக்க இலக்கங்களுடன் குறிப்பிடப்பட வேண்டும்.
- ஒவ்வொரு புத்தகமும், கோப்பும் இலக்கமிடப்பட வேண்டும். தொடர்புடைய ஆவணங்கள், கோவைகள் அவற்றின் தன்மைக்கு ஏற்ப ஒன்றாக வைக்கப்படலாம்.

*உதாரணம்:- நிதி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் யாவும் அலுமாரியின் இரண்டாம் தட்டில் வைக்கப்படல்.*

- கோவைகள் வைக்கப்படும் இடத்தில் (அடுக்கில்) அக் கோவைகள் தொடர்பான தலைப்பை எழுதி வைத்தல் வேண்டும்.
- கோவை யில் இடப்பட்டு ள்ள ஒவ்வொரு தாளும் இலக்கமிடப்படுவதுடன் அவற்றின் பட்டியல் கோவையில் உட்புற மட்டையில் எழுதப்பட்டிருத்தல் சிறந்தது (தாள்கள் அகற்றப்பட்டிருந்தால் கண்டறிவது சுலபம்)
- அனைத்துப் புத்தகங்கள், ஆவணங்கள், கோவைகள், விரபங்களை உள்ளடக் கியதாக ஒரு தனியாக பதிவுப் புத்தகமும் பராமரிக்கப்படலாம்.
- முக்கியமான கோவைகள் புத்தகங்களை அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர்கள் மாத்திரம் எடுக்கும் வகையில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும்.
- நிறுவனம் தயாரிக்கும் கடிதங்கள், ஆவணங்கள் தெளிவாக உரிய ஒப்பங்கள், முத்திரைகள் இடப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட பின்பே கோவைப்படுத்தப்பட வேண்டும். அரைகுறையாக நிரப்பப்பட்டு கோவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பிரயோசனமற்றுப் போவதுடன் நிர்வாக சீர்குலைவிற்கும் காரணமாகிவிடலாம். சட்ட நடவடிக்கைகளின் போதும் உரிய ஆவ ணங்கள் இருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும் . (தொடரும்)

# பிரணாப் முகர்ஜியின் கொழும்பு விஜயம்

# மத்திய அரசின் கண்துடைப்பு நாடகம்

சர்வதேச தமிழ் சமுதாயத்தின் பக்கம் உள்ள நியாயங்களை எடுத்துச் சொல்லக் கூடிய, விவாதிக்கக்கூடிய சந்திப்பாக பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பு அமையவில்லை. ஏதோ கடமைக்கு டில்லி சென்றோம் போர் நிறுத்தத்தை வலியுறுத்தினோம் என்கிற அளவில் இந்தச் சந்திப்பு முடிந்து விட்டது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பிரதமருடனான சந்திப்பு குறித்து கருத்து தெரிவிக்கும் போது கூறினார்.

இச் சந்திப்பு தொடர்பாக புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கருத்து தெரிவிக்கையில்,எந்த நோக்கத்திற்காக நாங்கள் டில்லிக்கு பயணம் மேற் கொண்டோமோ அது நிறைவேற வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம். இலங்கையில் நிரந்தர அமைதி வர வேண்டுமானால் அங்கு சிங்களவர்களும் தமிழர்களும் சரி சமமாக

## இந்திய பிரதமருடனான சந்திப்பு குறித்து விளக்கமளிக்கின்றனர் கட்சித்தலைவர்கள்

நடத்தப்பட வேண்டும் என்றார். இலட்சிய தி.மு.க தலைவர்விஜய டி இராஜேந்தர் கருத்து தெரிவிக்கையில்,

ஈழத்தில் நடை பெறும் போரில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளைக் கூட பலி கொடுக்க வேண்டியிருக்கிறது எனவே இந்திய அரசு தனது செல்வாக்கை பயன்படுத்தி போர் நிறுத்தம் ஏற்பட வழிகாண வேண்டும். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட போது இருந்த சூழல் வேறு தற்போதுள்ள சூழல் வேறு எனக் கூறினார்.

### தொல் திருமாவளவன்

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்ததாவது, பிரதமரைச் சந்தித்த போது ஒவ்வொரு கட்சித் தலைவருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டது; அப்போது எங்களது கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொன்னோம் என்னுடைய வாய்ப்பின் போது விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கம் என்கிறார்கள் . ஆனால், புலிகளோ தற்போது வெளிப்படையாக போர் நிறுத்தத்திற்கு அறை கூவல் விடுத்திருக்கிறார்கள்.

ஆனால் சிங்கள அரசு போர் நிறுத்தத்திற்கு தயாராக இல்லை அதிலும் குறிப்பாக இந்தியப் பிரதமரான உங்களை புது டில்லியில் சந்தித்துப் பேசிய பின்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் செய்ய மாட்டோம் என்று துணிச்சலாக அறிவிக்கிறார்.

இதனால் தமிழக மக்கள் இந்திய அரசாங்கம் ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும் செயல்படுவதாகக் கருதுகிறார்கள் இதனால் வருத்தம் அடைதிருக்கிறார்கள். இத்தகைய சூழல் நீடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பிரதமராகிய உங்களுடைய பொறுப்பு. உங்களுடைய செல்வாக்கை, ஆளுமையைப் பயன்படுத்தி ஈழத்தில் நடை பெறும்இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அப்போது தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு குறுக்கிட்டு, திருமாவளவன் சொல்லும் கருத்திலிருந்து நான் முரண் படுகிறேன் ஒட்டுமொத்தமாக தமிழக மக்கள் அனைவரும் மத்திய அரசுக்கு எதிராக இல்லை எல்லோருமே மத்திய அரசை தவறாக நினைப்பதாகச் சொல்வது தவறு

என்றார்.

இதனால் கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. அப்போது முதல்வர் கலைஞர் கருணாநிதி பேசியது போதும் என்பது போல் என்னைப் பார்த்தார். அதனால் போர் நிறுத்தம் தான் இப்போதைய தேவை இலங்கை அரசிடம் அதை வலியுறுத்தும் கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது. இந்திய அரசு நினைத்தால் இதைச் சாதிக்க முடியும். அதற்குரிய வலிமை நமக்கு இருக்கிறது என்று கூறி அமர்ந்தேன்.

அடுத்து பேசிய விஜய டி இராஜேந்தரும் என் கருத்துக்களையொட்டிப் பேசினார். தமிழக மக்களுக்கு மத்திய அரசின் மீது அதிருப்தியும் வருத் தமும் ஏற்பட்டிருப்பதாக அவரும் சுட்டிக் காட்டிப் பேசிய போது தங்க பாலு மீண்டும் எழுந்து இதற்கு மறுப்பு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்காக நாம் புதுடில்லிக்கு வரவில்லை ஈழத்தில். தவிக்கும் அப்பாவித் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதற்குத்தான் நாம் இங்கு வந்திருக்கிறோம் எனவே,அவர்களது நிலை குறித்து மட்டுமே பேச வேண்டும் என்றார் தங்கபாலு.

உடனேமருத்துவர் இராமதாஸ், திராவிட கழகத் தலைவர் கி. வீரமணி, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா. பாண்டியன் என எல்லோருமே குறிக்கிட்டு நாங்களும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்க இங்கு வரவில்லை. ஈழத் தமிழர்களுக்காகவே டில்லிக்கு வந்திருக்கிறோம். எனவே,எங்களுடைய பேச்சை பிரச்சினைக்குரியதாக ஆக்கிவிடாதீர்கள் என்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் மீண்டும் பேசினேன்.

மத்திய அரசு இதே போக்கை கடைப்பிடித்தால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் மத்திய கூட்டணிக்கு தமிழகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றேன். மீண்டும் பேசிய தங்கபாலு எதற்காகப் இப்படிப் பேசுகிறீர்கள் இப்போது நாம் தேர்தல் குறித்து விவாதிக்க வரவில்லை. எனவே தேர்தல் குறித்து பேசாதீர்கள் என்றார்.

இதையடுத்துமற்ற தலைவர்களும் பேசிய பின்னர் இறுதியாக முதல் அமைச்சர்

## பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சரும் இலங்கை அரசுக்கு வக்காளத்து வாங்கினர்

கருணாநிதி பேசினார் அப்போது இலங்கை பிரச்சினை குறித்து அந் நாட்டுடன் கலந்து பேச உடனடியாக மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியைக் கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தினார் இதற்குப் பிரதமர் மன்மோகன் சிங் மறுப்புத் தெரிவிக்காமல் ஏற்றுக் கொண்டார். அதிகாரிகளுடன் கலந்து பேசி பிரணாப்முகர்ஜி எப்போது இலங்கை செல்வார் என்பதை விரைவில் தெரிவிப்பதாகப் பிரதமர் சொன்னார்.

பின்னர் பிரணாப் முகர்ஜியும் பிரத மரும் சுமார் ஐந்து நிமிடங்கள் போல் எங்கள் மத்தியில் பேசினார். இருவரும் ஒரே மாதிரியான விஷயங்களைத் தான் பகிர்ந்து கொண்டனர்.

பிரதமர் பேசும் போது சிங்கள அரசாங்கம் ஒன்றும் பிடிவாதமாக இல்லை. இலங்கை அரசும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என அந் நாட்டு அரசாங்கம் வலியுறுத்துகிறது. ஆயுதங்களைக் கை விட்டு அதன் பின்னர் பேச்சு மேசைக்கு வந் தால் தான் ஆக்க பூர்வமான முடிவுகளை



எடுக்க முடியும் என்று அந் நாடு கருதுகிறது.

தன்னையே கூட விடுதலைப்புலிகள் கொன்று விடுவார்கள் என மஹிந்ர ராஜபக்ஷ கருதுகிறார். புலிகள் பயங்கரவாத இயக்கம் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்றார் பிரதமர்.

ஆக ஒட்டு மொத்தத்தில் இந்தியப் பிரதமரின் பேச்சும்,பிரணாப் முகர்ஜியின் பேச்சும் சிங்கள அரசுக்கு வக்காலத்துக்கு வாங்குவது போல் தான் அமைந்திருந்தது.

தன்னையே கொலை செய்து விடு வதாக ராஜபக்ஷ கருதுவதாகவும் இதை இலங்கை அரசுத் தரப்பு தன்னிடம் தெரிவித்ததாகவும் பிரதமர் எங்களிடம் சொன்னார். எனவே பிரதமரைச் சந்தித்த போது இந்தியாவின் உதவிகளை பெற்றுக் கொண்டு இந்திய அரசுக்கு இலங்கை அரசு எவ்வாறெல்லாம். கெட்டபெயரை ஏற்படுத்துகிறது என்பதையும் இதனால் மத்திய அரசுக்கு அடுத்து வரும் தேர்தல் களில் எத்தகைய பாதிப்பு ஏற்படும் என்ப தையும் தமிழக மக்களின் உணர் வுகளையும் நாம் சரியாக எழுத்துச் சொல்லி யிருக்க வேண்டும் அதைச் செய்ய தவறி விட்டதாகவே கருதுகிறேன்.

### டாக்டர் கிருஷ்ணசாமி

புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியதாவது,

பிரதமரைச் சந்திப்பதற்காக தமிழகத்திலிருந்து அனைத்துக்கட்சித் தலைவர்கள் மேற்கொண்ட டில்லிப் பயணத்தை ஒட்டுமொத்தமாகக் குறை கூறுவது சரியல்ல. ஆங்கிலத்தில் *சம்திங் இஸ்பெட்டர் தன் நத்திங்* என்பார்கள். அந்த வகையில் இலங்கை பிரச்சினை தொடர் பாக எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளாமல் இருப்பதைவிட தமிழக மற்றும் இந்திய அரசு இந்தளவுக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வது வரவேற்கப்படவேண்டிய ஒன்று.

எந்த நோக்கத்திற்காக நாங்கள் டில்லிக்குப் பயணம் மேற்கொண்டோமோ அது நிறைவேறவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்

இலங்கைப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அங்கு இரு தரப்பினரும் ஜனநாயக பூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்கிறோம்.

அனைத்துக்கட்சிக்குழுவினர் வலியுறுத்திய இக் கருத்தினை ஏற்றுக்கொண்ட இந்தியப் பிரதமர் இது தொடர்பாக இலங்கை அரசிடம் பேசுவதாகக் கூறியதுடன் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியையும் அங்கு அனுப்பி வைப்பதாக உறுதி அளித்தார்.

பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்று தமிழக முதல்வர் தான் யோசனை தெரிவித்தார். அதற்கு பிரதமர் எந்த மறுப்பும் சொல்லாமல் உடனே ஏற்றுக்கொண்டு உடனடியாக பிரணாப்புடன் பேசியது எங்களுக்கு மன நிறைவைத் தந்தது.

புதிய தமிழகம் கட்சியைப் பொறுத்த வரையில் பிரணாப் முகர்ஜி உடனடியாக கொழும்புக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும். அவர் தனியாகச் செல்லாமல் புதுடில்லிக்கு வந்து பிரதமரைச் சந்தித்த தமிழக அனைத்துக்கட்சித் தலைவர்கள் அடங்கிய குழுவொன்றையும் உடன் அழைத்துச் செல்வது தான் சரியாக இருக்கும். அவர் தனியாகச் சென்றால் கொழும்பில் என்ன பேசினார் என்னனென்ன நடவடிக்கைகளை அடுத்து மேற்கொள்வார்.

இலங்கை அரசுத் தரப்பினர் கூறியது என்ன என்பன போன்ற விபரங்கள் பின்னர் முழுமையாகத் தெரியாமல் போய்விடக்கூடிய வாய்ப்புண்டு. பிரதமரைச் சந்தித்த போது எங்களில் சிலர் கூறிய கருத்துக்களுக்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு தெரிவித்ததாகக் கூறப்படுவது உண்மையல்ல அனைத்துக்கட்சிகளுக்கும் இடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் இருக்கவே செய்யும். ஆனால் ஈழப் பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கு பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதற்கு காங்கிரஸாரும் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டனர்.

கூட்டத்திற்கு சற்று தாமதமாக வந்த பிரணாப் முகர்ஜியும் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் செஞ்சிலுவை சங்கத்திடம் முறையாக ஒப்படைக்கப்பட்டதா அவை ஒழுங்காக விநியோகிக்கப்படுகிறதா என்பதை தீவிரமாகக் கண்காணிக்கப்போவதாக உறுதியளித்தார்.

என்னைப் பொறுத்தவரையில், பிரதமரிடம் ஒரு விஷயத்தை முக்கியமாக வலியுறுத்தினேன் இலங்கை உடனடியாகப் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் இலங்கையில் நிரந்தர அமைதி வரவேண்டுமானால் அங்கு சிங்களவர்களும் தமிழர்களும் சரிசமமாக நடத்தப்படவேண்டும். அங்கு இரண்டு மொழிகள் இருந்தால் ஒரே நாடாக இருக்கும். ஒரே மொழி தான் இருக்கும் என்றால் இலங்கை இரண்டு நாடாகும் என்று கொல்வின் ஆர்.டி சில்வா என்ற அறிஞர் கூறியதை சுட்டிக்காட்டினேன்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சு பொறுப்பு மாற்றப்பட்டால் அரசிலிருந்து விலக பௌசி தீர்மானம்

## சிங்கள வார ஏடு தகவல்

(கொழும்பு)

எரிபொருள் மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தித்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தற்போது வகித்து வரும் அமைச்சுப் பொறுப்புக்களை அரசு பொறுப்பேற்றுக் கொண்டு வேறு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குமானால் அமைச்சர் பௌசி அரசிலிருந்து ஒதுங்கிக்கொள்ள தீர்மானித்திருப்பதாக சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரை தொடர்பாக ஜனாதிபதியுடன் நெருக்கமான சில சிரேஷ்ட அமைச்சர்கள் அமைச்சர் பௌசியுடன் அரசியல் ரீதியாக முரண்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான கருத்து முரண்பாடு காரணமாக அமைச்சர் பௌசியை அமைச்சுப் பொறுப்பிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியிருப்பதாகவும் அமைச்சர் பௌசி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை அரசாங்கத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தன்னிடமுள்ள தற்போதைய அமைச்சுக்களை எடுத்துவிட்டு வேறு அமைச்சுக்கள் தரப்படுமானால் தான் அரசிலிருந்து ஒதுங்கப் போவதாக அமைச்சர் பௌசி தமக்கு நெருக்கமான சிலரிடம் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திறைசேரியின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் பௌசி கடந்த வியாழக்கிழமை புனித ஹஜ் பயணம் சென்றுள்ளார்.

எதிர்வரும் 12ஆம் அல்லது 13ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார். அவர் நாடு திரும்பிய பின்னரே அவரது அமைச்சு நிலை குறித்து தெரியவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.கிழக்கு கோப்பாய் பிரிவு தொண்டர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலுக்கு பிரிவிலுள்ள சகல தொண்டர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (5-6-134)

# 3 மாகாண சபைகளைக் கலைக்க ஜனாதிபதி மஹிந்த திட்டம்

(கொழும்பு)

இவ்வார இறுதியில் மூன்று மாகாண சபைகளைக் கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாண சபைகளைக் கலைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இன்று அல்லது நாளை இந்த மாகாணசபைகள் கலைக்கப்படலாம் என 'லக்பிம நாளேடு' செய்தி வெளியிட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் ஆட்சிக் காலம் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியும், வடமத்திய மாகாண சபையின் ஆட்சிக் காலம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியும், மத்திய மாகாணசபையின் ஆட்சிக் காலம் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதியும் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# 35 உணவு லொறிகள் ஓமந்தையூடாக வன்னி சென்றன

(வவுனியா)

உணவுப் பொருட்களை ஏற்றிய 35 லொறிகள் நேற்று முன்தினம் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக வன்னிக்கு சென்றிருப்பதாக வவுனியா அரசாங்க செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றில் இரண்டு லொறிகள் இந்திய நிவாரணப் பொருட்களை கொண்டு சென்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இருபத்தி மூன்று லொறிகளில் உணவுப் பொருட்கள் வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். இவற்றில் இரண்டு லொறிகள் இந்திய நிவாரணப் பொருட்களை ஏற்றிய லொறிகளாகும் கடந்த வாரம் இந்திய நிவாரணப் பொருட்களை ஏற்றி வந்த லொறிகளில் குறித்த இரண்டு லொறிகளும் பழுதடைந்த நிலையில் ஓமந்தை சோதனைச் சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்விரு லொறிகளும் நேற்று முன்தினம் முல்லைத்தீவை வந்தடைந்ததாக அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு வந்தடைந்த லொறிகளில் மண்ணெண்ணெயும் வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் அடங்கிய பொதிகள் கடந்த வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மக்களுக்கு பகிர்ந் தளிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திற்கு பன்னிரெண்டு லொறிகளில் உணவுப் பொருட்கள் நேற்றுமுன்தினம் மாலை வந்தடைந்ததாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் ந.வேதநாயகன் தெரிவித்தார். (5)

# வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கம் இலகுவில் வெற்றிகொள்ளும்

## அமைச்சர் நிமால் நம்பிக்கை

எதிர்க்கட்சிகள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அரசாங்கம் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் இலகு வெற்றியை ஈட்டும் என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள வரவு செலவுத் திட்ட மூன்றாம் வாக்கெடுப்பில் அரசாங்கம் எளிதில் வெற்றியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகால நோக்குடன் தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம் முழுக்க முழுக்க மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


கல்வி,சுகாதாரத்துறை, தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி என பல விடயங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார். (5)

## வருடாந்த பொதுக்கூட்டமும் ஆளுநர் சபை தேர்தலும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசிய தலைமையகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் ஆளுநர்சபைக்கான தேர்தலும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் இம்மாதம் 28ஆம்திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (5-6-134)

# வன்னி பேரவலம் தொடர்பில் சர்வதேச பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு



(கொழும்பு)

சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியையும் அனைத்துலக தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சுவிற்சர்லாந்து சென்றிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி,யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி, செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் தெற்காசியப் பிராந்திய நடவடிக்கைகளுக்கான பிரதித் தலைவர் ஆகியோரைச் சந்தித்து வன்னி மக்கள் எதிர்நோக்கும் அவலம் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத் துக் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை தெற்காசியப் பிராந்திய நடவடிக்கைகளுக்கான பிரதித் தலைவர் மொனிக்கா ஸனெல்லியுடனான சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது, வன்னிக்கு அண்மையில் சென்று மக்களின் துயரத்தை நேரில் பார்வையிட்டு வந்தமை தொடர்பாகவும் மக்களைத் துன்புறுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் மென்மேலும் பாதிக்கப்படுவது தொடர்பாகவும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துலக சமூகம் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி விரிவாக எடுத்துக் கூறினார். (5-6)

# த. தே. கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் இரகசிய பொலிஸாரால் விசாரணை செய்யப்படுவர்

## லக்பிம நாளிதழ் தகவல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மேலும் சிலர், விரைவில் இரகசிய பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் தரப்புகளை மேற்கோள்காட்டி 'லக்பிம' செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். அத்துடன், அவர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது டன் வெளிநாடுகளில் அவர்களுக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபடுகிறார்கள். அதேநேரம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறவு களைக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, அவர்களை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸ் தரப்புகள் குறிப்பிட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன்,அரியநேந்திரன் மற்றும் ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் விசாரணை செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்புகள் தெரிவித்துள்ளன. (5)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (5-6-134)


## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் தரம் 8 வகுப்புகளில் கணிதம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான இருநாள் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (6)

# பாகிஸ்தானை தீவிரவாத நாடாக அறிவிக்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆலோசனை!

## ராஜதந்திரிகள் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

மும்பை தாக்குதலுக்கு பாகிஸ்தான் பின்னணி இருப்பது அமெரிக்கா உட்பட பல்வேறு உலக நாடுகளுக்கு ஆதாரபூர்வமாக தெரியவந்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனம் பயிற்சி கொடுத்து இந்தியாவில் தாக்குதல் நடத்த அனுப்பி வைப்பதும் நிருபணம் ஆகி இருக்கிறது. தீவிரவாதிகளை ஒடுக்கும் படி பாகிஸ்தானை அமெரிக்கா ஏற்கனவே பல தடவை எச் சரித்தும் பலன் இல்லை.

தீவிரவாத இயக்கங்கள் என்று அமெரிக்கா பட்டியல் இட்டுள்ள பல்வேறு இயக்கங்களில் சில இயக்கங்கள் பாகிஸ்தானில் தான் செயற்பட்டு வருகின்றன. தீவிரவாதத்தை தூண்டிவிடும் பாகிஸ்தானை தீவிரவாத நாடு என்று அதிகாரபூர்வமாக அறிவிக்க திட்ட மிட்டு இருந்தது.

ஆனால் இந்த திட்டம் நீண்ட காலமாகவே கிடப்பில் போடப்பட்டு இருந்தது. எனினும் தற்போது பதவி ஏற்க திட்டமிட்டிருந்தது. ஆனால் ஜனாதபதி பராக் ஒபாமா ஆலோ சனை நடத்தி வருவதாக அமெரிக்க இராஜ தந்திரிகள் தெரிவிக்கின்றனர். இது பற்றி அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் மும்பைத் தாக்குதலையடுத்து பாகிஸ்தான் மீது தீவிரவாத நாடு என்று முத்திரை குத்தும் சூழ்நிலை அதிக தூரத்தில் இல்லை என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் நிர்வாகம் முடிபடைய இன்னும் 6 வாரங்களே உள்ளன. எனவே அவர் இது பற்றி இப்போது கொள்கை முடிவு எதுவும் எடுக்கமாட்டார்.

புதிய அதிபராக ஜனவரி 20ஆம் திகதி பதவி ஏற்கும் ஒபாமா தான் இதில் அதிகார பூர்வ முடிவை அறிவிப்பார். இப்போதே ஒபாமா அதுபற்றி ஆலோசித்து வருகிறார். பாகிஸ்தானின் தீவிரவாத செயற்பாடுகள் பற்றிய ஆவணங்களை அவர் தூசி தட்டப்போகிறார்.

விளையாட்டு காட்டிய பாகிஸ்தான் விரைவில் வினையை சந்திக்கப்போகிறது. பாகிஸ்தான் இராணுவம்மீதான நம்பிக்கையை அமெரிக்கா எப்போதோ இழந்து விட்டது. அதனால் தான் முன்னால் ஜனாதிபதி முஷாரப் ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தான் இராணுவத்துக்கு அளித்து வந்த ஆதரவையும் அமெரிக்கா விலக்கிக் கொண்டது. (5)

## மசகு எண்ணெய் விலை 40 டொலரை விட குறைவு

(லண்டன்)

மசகு எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 40 அமெரிக்க டொலரை விட குறைந்துள்ளது. இது கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக குறைவாகும்.

லண்டனில் ஒரு பீப் பாய் மசகு எண்ணை 39.50 டொலருக்கு விற் பனையாகிறது.

கடந்த 2005ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்த விலையை விட மிக குறைவாகும். அப்போது 40.20 டொலருக்கு விற்பனையாகியது.

கடந்த ஜுலை மாதம் மசகு எண்ணை பீப்பாய் ஒன்றுக்கு 147 டொலராக இருந்தது. இது தான் மிக அதிக விலை என்பது குறிப் பிடத்தக்கது. (5)

## மும்பை பயங்கரத்தின் சதிகாரர்கள் இருவர் கைது

(கொல்கத்தா)

மும்பை பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடையதாகக் கருதப்படும் இரண்டு முக்கிய குற்றவாளிகளை மேற்கு வங்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் போலி ஆவணங்களைக் கொடுத்து சிம் அட்டைகள் வாங்கியதும் அவற்றை காஷ்மிர் வழியாக பாகிஸ்தானுக்கு அனுப்பியதும் தெரியவந்துள்ளது. மேற்கு வங்கத்தில் பயங்கரவாதத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்காக சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு அதிரடிப் படை யின் தலைவர் ராஜீவ்குமார் நேற்று முன்தினம் கூறியதாவது,

கடந்த மாதம் 26ஆம் திகதி மும்பையில் நடந்த தாக்குதலில் பங்கேற்ற பயங்கர வாதிகளிடமிருந்து ஐந்து சிம் அட்டைகளை மும்பை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இந்த ஐந்து அட்டைகளில் மூன்று அட்டைகள் மேற்கு வங்கத்தில் வாங்கப்பட்டது. விசாரணையில் தெரிய வந்தது.

இதையடுத்து மேற்குவங்கம் முழுவதும் சிம் அட்டைகளின் விற்பனையை கடந்த சில நாட்களாக தீவிரமாகக் கண்காணித்து வந்தோம். இந் நிலையில் கோல்கட்டியவில் ஹவுரா ரயில் நிலையத்தில் தவுசீப் ரகுமான் என்ற நபரை கைது செய்தோம். ரகுமானிடம் இருந்து ஏராளமான சிம் அட்டைகளை கைப் பற்றினோம். போலியான ஆவணங்களைக் கொடுத்து சிம் அட்டைகள் வாங்குவது தான் தவுசீப் ரகு மானின் முக்கிய பணி.

தவுசீப் ரகுமான் கொடுத்த தகவல் அடிப்படையில் முக்தர் அகமது சேக் என்ற நபரை டில்லியில் கைது செய்தோம். அவருடன் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கைதானார். முக்தர் அகமது சேக்ஜம் முகாஸ்மீர் ஜ.ஜி.அலுவலக கான்ஸ்டபிளாகப் பணியாற்றுகிறார். சேர்க்குடன் கைதான சப் இன்ஸ்பெக்டர் விசாரணைக்குப் பின் விடுவிக்கப்பட்டார்.

தவுசீப்பிடமிருந்து சிம் அடைகளை அகமது சேக் பெற்றுக்கொண்டு அங்கிருந் து காஷ்மீர் வழியாக பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதுபோல் போலியான முகவரிகளைக் கொடுத்து ஏராளமான சிம் அடைகள் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தெரிய வந்துள்ளது.

இவற்றில் சில அட்டைகள் முப்பைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்றார். (5)



துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெற்ற கூட்டுச் சந்திப்பில் ஆப்கன் அதி பர் கர்சாய், துருக்கி பிரதமர் தய்யீப் எர்டாகன் மற்றும் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி கலந்து கொண்டனர்.

# பிரணாப் முகர்ஜியின் கொழும்பு.....

6 ஆம் பக்கத்தொடர்ச்சி....

**விஜய . டி. இராஜேந்தர்**

இலட்சிய தி.மு.க. தலைவர் விஜய டி. இராஜேந்தர் கூறியதாவது,
விடுதலைப்புலிகள் என்றாலே தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு பதற்றமாகிவிடுகிறார். பிரதமரை நாங்கள் சந்தித்த போது ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. நான் என்னுடைய கருத்துக்களை ஆணித்தரமாக தெளிவாக முன்வைத்தேன்.

முதற்கட்டமாக செஞ்சிலுவை சங்கம் மூலமாக ஈழத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்ததற்கு நன்றி தெரிவித்தேன். ஆனால், இதுவரை நம்முடைய முக்கிய கோரிக்கையான போர் நிறுத்தம் என்பது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினேன். இன்று ஈழத்தில் நடைபெறும் போரில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளைக் கூட பலி கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்திய அரசு தனது செல்வாக்கை பயன்படுத்தி போர் நிறுத்தம் ஏற்பட வழிகான-வேண்டும். முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட போது இருந்த சூழல் வேறு தற்போதுள்ள சூழல் வேறு ராஜீவ் படுகொலை காரணமாக விடுதலைப்புலிகள் மீதும் தீவிரவாதத்தின் மீதும் மக்களுக்கு அன்று வெறுப்பு ஏற்பட்டிருக்கலாம். காரணம் ராஜீவ் என்ற பெரிய தலைவரை நாம் இழந்திருந்தோம்.

ஆனால் அச்சம்பவம் நிகழ்ந்து பல வருடங்கள் கடந்துவிட்டது. ஆனால் இன்று அப்பாவித்தமிழர்கள் ஈழத்தில் கொல்லப்படுவதைக் கண்டு தமிழகத்தில் உள்ள சகோதர சகோதரிகளுக்கு அவர்கள் மீது பரிதாபம் தான் ஏற்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகள் மீதுள்ள வெறுப்பினாலும் அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதாலும் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் மத்திய அரசு மெத்தனமாக இருந்து விடக்கூடாது என்று நான் கூறினேன்.

நான் இப்படிச் சொன்னதும் என்னுடைய கருத்துக்களை முடக்கும் வகையில் தங்கபாலு எழுந்து பேசினார். நான் மீண்டும் எதிர்த்துப் பேசும்போது விடுதலைப்புலிகளைப் பழி வாங்க நினைக்கிறீர்கள் உங்களுடைய இந்த எண்ணத்தினால் தான் ஈழத்தமிழர்களுக்கு உங்களால் உதவ முடியாமல் போய்விட்டது என்பதை தைரியமாகச் சொன்னேன்.

அதனால் தான் தமிழக நாளேடுகளில் தங்கபாலு தடுத்த போதும் கூட டி.ஆர். பேசட்டும் அவரது கருத்துக்களைச் சொல்லட்டும் என்று பிரதமரே சொன்னதாக செய்தி வெளியாகியிருக்கிறது. நான் எதற்கும் பயப்படாமல் என் கருத்துக்களைச் சொல்லக் கூடியவன் என்பது இதன்மூலம நிருபணமாகிவிட்டது. ஏனெனில் நான் பேசுவதெல்லாம் உண்மை.

தங்கபாலு இன்னமும் பழைய பல்லவியைத் தா பாடிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஈழத்தமிழர்களைப் பற்றி பேச அவர் தயாராக இல்லை.

பிரணாப் முகர்ஜியுடன் சேர்ந்து தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களும் இலங்கைக்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்துவது சாத்தியமில்லை. நம்முடைய கருத்துக்களை முதல்வரிடமும் வெளியுறவு அமைச்சரிடம், பிரதமரிடம் சொல்வது நம் கடமை அதே போல் நம் கருத்துக்களை இலங்கையிடம் தெரிவிப்பது சம்பந்தப்பட்ட இம் மூவரின் கடமை.

நம் தரப்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பதை உலகத் தமிழர்களுக்குச் எடுத்துச் சொல்லும் விதமாகவேனும் பிரணாப் முகர்ஜியின் பயணம் கைகொடுக்கும். மற்றப்படி அவரது பயணமானது ஈழத் தமிழர் பிரச்சினை தீர வழிவகுக்குமா என்பது குறித்து விவாதிக்க இது சரியான நேரமல்ல.

விடுதலைப் போராளிகள் போர் நிறுத்தத்திற்கு தயாராக உள்ள போதிலும் இலங்கை அரசு அதற்கு தயாராக இல்லை என்பதை நாங்கள் வலியுறுத்திய போது பிரதமரும் பிரணாப் முகர்ஜியும் சில கருத்துக்களைத் தெரிவித்தனர்.

போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும் பேதெல்லாம் விடுதலைப்புலிகள் ஆயதங்களை வாங்கிக் குவிப்பதாகவும் போர் நிறுத்தத்தை மீறி மீண்டும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. எனவே கடந்த கால கசப்பான அனுபவங்களைக் கருத்தில் கொண்டு தான் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு வர வேண்டும் என இலங்கை அரசு வலியுறுத்தியிருப்பதாக பிரதமர் கூறினார்.

ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இதை ஏற்க முடியாது போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசு தயாராக இல்லை அதனால் தான் புலிகளால் தன் உயிருக்கு ஆபத்து என்று தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷ கூறுகிறார். இது வெறும் பசப்பு வார்த்தை இப்படியெல்லாம் சொல்லி போர் நிறுத்தம் செய்யாமல் இருப்பதை அவர் நியாயப்படுத்துகிறார்.

தன்னையும் தன் மனைவியையும் தன்னைச் சார்ந்தவர்களையும் விடுதலைப் புலிகள் கொன்று விடுவார்கள் என்று ராஜ பக்ஷ கருதுகிறார். என்பது போல் எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்படியெல்லாம் சில காரணங்களைச் சொல்லி போர் நிறுத்தம் செய்ய வேண்டும்என்கிற கோரிக்கையை இலங்கை அரசு தட்டிக் கழிக்கப் பார்க்கிறது .விடுதலை இயக்கம் பல முறை போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக சொல்கிறார்களே... அப்படியானால் எத்தனை முறை இலங்கைஅரசு இதே தவறைச் செய்திருக்கிறது எத்தனை முறை தான் கொடுத்த வாக்குறுதிகளைஇலங்கைஅரசு மீறியிருக்கிறது? இதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

மனச்சாட்சி என்பது பண்பாட்டுணர்ச்சியின் வளர்ச்சியடைந்த பாகம் தான்.

– ப்ராய்டு

வலம்புரி

## க.பொ.த (சா/த) பரீட்சை சீராக நடக்க அனைவரும் உதவவேண்டும்

நாடு பூராகவும் இன்று க.பொ.த (சா/த) பரீட்சை ஆரம்பமாகின்றது. பொதுப் பரீட்சையாக இடம்பெறும் இப்பரீட்சை சீராக –ஒழுங்காக நடைபெறுவதற்கு அனைவரினதும் பூரண ஒத்துழைப்பு அவசியமாகும்.

பரீட்சை நடைபெறும் காலத்தில் மின்சார சபையின் மின் விநியோகம் முதல் காலநிலை வரை சீராக இருந்தால் மட்டுமே மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற ஏதுவாகும்.

எனினும் சம காலத்து மாணவர்கள் யுத்த சூழ்நிலைக்குள் ஆளாகியமையால் அவர்கள் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்துவதற்கான புறச்சூழல் இல்லாது போய்விட்டதென்றே கூறவேண்டும்.

அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நிலையை ஒரு கணம் சிந்தித்தால் வேதனையே மிஞ்சும்.

யுத்தத்தினால் இடப்பெயர்வு –இயற்கையின் சீற்றத்தால் இடம்பெயர்வு, படிப்பதற்கு இடமில்லை, பாடப்புத்தகங்கள் கையில் இல்லை என்ற பல்வேறு இடைஞ்சல்கள் மத்தியிலேயே அந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

க.பொ.த (சா/த) பரீட்சை பொதுப் பரீட்சையாக நாடு பூராகவும் இடம்பெறும்போது ஒரு பகுதி மாணவர்கள் யுத்தத்தின் பாதிப்போடு பரீட்சைக்குத் தோற்றுவதென்பது கடினமான விடயமே.

அதேநேரம் பரீட்சைப் பெறுபேறுகள் ஒட்டு மொத்தமாகவே தீர்மானிக்கப்படுவதால் யுத்தப் பாதிப்புக்கு ஆளான மாணவர்கள் பெறுபேற்றில் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவர்.

இதேபோல் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட கடும் மழை, பெரும் புயல் காரணமாக வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள், பாடப்புத்தகங்களை வெள்ளத்திற்கு அள்ளிக் கொடுத்தவர்கள் என்ற பல்வகைப் பரிதாபங்களுடன் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

ஆகவே பல்வேறு கஷ்டங்களில் மத்தியில் பரீட்சைக்குத் தோற்றும் வடக்கு கிழக்கு மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்ற நாட்களாவது நிம்மதியாக இருப்பது அவசியம்.

அத்தகையதோர் அமைதியான சூழமைவை அந்த மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க மனித நேயத்துடன் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

அதற்காக பரீட்சைக் காலங்களில் யுத்த நிறுத்தத்தை உத்தியோகப் பற்றற்ற முறையிலேனும் கடைப்பிடிப்பது அவசியம்.

யுத்தம் நடக்கின்றபோது பரீட்சை எழுதுவதென்பது முடியாத காரியம்.

ஆகவே எதிர்கால சந்ததியின் நன்மை கருதி யுத்தத்தை நிறுத்த உரியவர்கள் ஆவன செய்தால் அது நிரந்தர யுத்த நிறுத்தத்திற்குக் கூட வாய்பாக அமையலாம்.

அதே சமயம் இயற்கையும் தன் சீற்றம் தணித்து பரீட்சை சீராக நடைபெற உதவுவதற்கு இறைவனின் திருவருளை வேண்டுவோம்.

# பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

நிரபராதியானவர்களை பூசாவில் இருந்து முழுமையாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற் கொள்வோம். அரசியல்,பிரதேச மத ,மொழி வேறுபாடு களுக்கு அப்பால் எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன் னெடுப்போம் என்று மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் ,வாழ்க்கைத்தொழில் ,தொழில் நுட்பப்பயிற்சி பிரதி அமைச்சருமான பெ.இராதகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

காலி பூசா முகாமிற்கு அமைச்சர் ராஜிதசேனாரட்ண , வாசுதேவ நாணயக்காரர் ,பிரதி அமைச்சர் பாயிஸ் ஆகி யோருடன் விஜயம் செய்து அங்குள்ள 327 ஆண் ,பெண் , தமிழ், முஸ்லிம், சிங்களக் கைதிகளை சந்தித்து அவர்களது விடுதலைக்கு நடவடிக்கை எடுத்த பிரதியமைச்சர் பெ. இராதாகிருஸ்ணனை அண்மையில் விடுதலை செய்யப்பட்ட கைதிகளும் ,அவர்களது பெற்றோரும் ,உறவினர்களும் கிராண்ட்பாஸ் மக்கள் பணியகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதான காலத்தில் வடபகுதிக்குச் சென்றவர்களையும் ,சுனாமி காலத்தில் உணவுப்பொருட்களைக்கொண்டுசென்ற தமிழர்களையும் ,தொழில் நிமித்தம் சென்ற இளைஞர்களையும் இரகசியப்பொலிஸார் தேடி கைது செய்து வருவதுடன் சுமார் 125 ற்கும் அதிகமான மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளது தொடர்பாக எமக்கு புகார்கள் கிடைத்துள்ளன.சமாதான காலத்தில் சிங்கள, முஸ்லிம ,தமிழ மக்கள நட்புறவுடன் செயற்பட்டனர். அப்படி வடபகுதிக்குச் சென்றவர்களில் தமிழர்களை மட்டும் தேடி கைது செய்துவருவது பெரும் சார்ச்சைகளை உருவாக்கி வருகிறது. அப்பாவிகளின் விடுதலைக்கும் அநாவசிய கைது ,கடத்தல்களுக்கும் நாம் இடமளிக்க மாட்டோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (5)

# யுத்தத்தில் கொல்லப்படும் படையினரை அரசு காணாமல் போயுள்ளனர் எனக்கூறுகிறது

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு யுத்தத்தில் காணாமல் போன படையினர்கள் என அரசாங்கத்தினால் சொல்லப்படுகின்றவர்களின் தொடர்பில் அவர்களின் படைத்தரப்பு நண்பர்களிடம் விசாரிக்கும் போது அவர்கள் இறந்துவிட்டார்கள் என சொல்கின்றனர்.

இவ்வாறு கொல்லப்படும் படையினரை காணாமல் போனதாகக்கூறப்படுவது அவர்கள் செய்யும் தியாகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும் என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் கொல்லப்பட்ட பல படையினருக்கு இன்னமும் மரண சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் வெளியிட்டுள்ள தகவலில் உயிரிழந்த படையினரின் பல பெற்றோர் உறவினர்கள் இந்த முறைப்பாட்டை தம்மிடம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு கண்காணிப்பு செய்தியாளர் சந்திப்பு அண்மையில் நடைபெற்ற போது உரையாற்றிய அவர் படையினர்களான தமது பிள்ளைகள் காணாமல் போயுள்ளதாகக்கூறி நட்டஈடு வழங்கப்படுவதும் தவிர்க்கப்படுவதாக பல பெற்றோர் முறையிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (5)

## தொண்டு நிறுவன பணியாளர்களுக்கு இலங்கை ஆபத்தான நாடு

### ஐரோ. ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

தொண்டு நிறுவன பணியாளர்களுக்கான ஆபத்தான நாடுகளில் இலங்கையும் ஒன்று என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவிகள் தொடர்பான ஆணையாளர் லூயிஸ் மைக்கல், இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் 29 தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இறுதியாக மட்டக்களப்பில் நோர்வே உதவியமைப்பின் பணியாளரான விக்னேஸ்வரன் கொல்லப்பட்டமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொண்டு நிறுவன பணியாளர்கள், பயமற்ற சூழ் நிலையில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (5)

## ஐ.தே.க.பிரதித்தலைவர் பொறுப்பை கரு ஏற்றால் ஆதரவளிப்பேன்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவுள்ள கரு ஜயசூரிய மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டால் அதற்கு பூரண ஆதரவளிக்க தாம் தயார் என கட்சியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கரு ஜயசூரிய மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்தால் தாம் ஒரு போதும் பிரதித் தலைவர் பதவிக்காக போட்டியிடப் போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழுத் தலைவர் கருஜெயசூரிய மீண்டும் கட்சியில் இணையாத ஓர் சந்தர்ப்பத்தில் மட்டுமே தாம் பிரதித் தலைவர் பதவிக்காக போட்டியிடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (5)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்படும்

## நாடாளுமன்ற தெரிவுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளது. அந்தக் குழுவின் இறுதி யோசனைகளை அமுல் படுத்து வதில் தாமதம் ஏற்பட்டமையால் அரச சார்பற்ற நிறுவனங் கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி விசேட விசார ணைக் குழுவொன்றை நியமிப்பது குறித்து இடைக்கால அறிக்கையில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக புதிய சட்டமூலம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளதாகவும் தெரிவுக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்களினால் அர சாங்கத்துக்கு ஏற்படும் பிரச்சினைகள் மட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-4)

## அண்மைய இயற்கை அனர்த்தத்தினால் தென்மராட்சியில் 5912 குடும்பங்கள் பாதிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அண்மையில் ஏற்பட்ட புயலுடன் கூடிய மழையினால் 5ஆயிரத்து 912 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 048 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 3 ஆயிரத்து 197 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 39 பேர் நலன்புரி முகாம்களில் பதிவு செய்துள்ளனர் 750 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 965 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

இவ்வனர்த்தத்தினால் அதிக பாதிப்புக்களை எதிர் நோக்கிய தென் மராட்சி கிழக்கில் உள்ள நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் மரக்கறிப் பயிர்களும் அழிவடைந்துள்ளன. (5-29)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி உலகிற்கு நன்மை செய்தல்



பிரதிபலனாக எதையும் வேண்டாதீர்கள் .ஆனால் கொடுக்கும் அளவு பெருகப்பெருக வருவதும் அதிகமாகும். இந்த அறையில் இருந்து காற்றை வெளியேற்றும் அளவு விரைவாகுந்தோறும் வெளியே உள்ள காற்றால் நிரப்பப்படும் ஒரு துவாரமும் விடாமல் எல்லாக்கதவுகளையும் மூடினால் உள்ளே இருப்பது அப்படியே இருக்கும். ஆனால் வெளியே உள்ளது ஒரு போதும் உள்ளே வராது. உள்ளே இருப்பது தேங்கி நின்று கெட்டுப் போய் நன்கு நிறைந்ததாகி விடும். ஆறு ஓயாமல் கடலிற்குள் பாய்ந்துகொண்டே இருக்கிறது. ஓயாமல் மீண்டும் நிரம்பிக்கொண்டும் உள்ளது. கடலில் புகுவதைத் தடை செய்யாதீர்கள் .அப்படிச்செய்கின்ற அந்தக்கணமே மரணம் உங்களை பற்றிக்கொள்கிறது.

கல்வி , அறிவு , செல்வம் , ஆள் பலம் , வலிமை , தைரியம் என்று இயற்கை நமக்குக் கொடுக்கின்ற எல்லாமே பிறருக்கு கொடுப்பதற்காகத்தான். நாம் இதை அடிக்கடி மறக்கிறோம். நமக்குக்கொடுக்கப்படும் பொருட்களின் மீது எனக்கு மட்டும் சொந்தம் என்ற முத்திரையை இடும்போது நம்முடைய அழிவுக்கு விதையை நாமே விதைக்கிறோம்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

04

சொந்த மரத்தை தறிப்பதற்கே ஏகப்பட்ட நிபந்தனைகள். கிராமசேவையாளர் முதல் மரக்கூட்டுத்தாபனம் வரை ஆற்றலைந்தாலும் சட்ட ரீதியாக மரம் வெட்டுவது என்பது முடியாத காரியம்.

மரங்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த இறுக்கமான சட்டங்களை அமுல்படுத்தினாலும் மறுபுறத்தில் சொந்த மரத்தை சொந்தத்தேவைக்கு தறிக்க அனுமதி இல்லை என்றால் மரம் நாட்டும் வேலையே தேவை இல்லை என்ற முடிவுக்குக் கூட மக்களை நகர்த்திவிடும் என்ற யதார்த்தம் உணரப்படவேண்டும்.



## விழுந்த மரத்தை வெட்ட முதல் நின்ற மரமே தறிபட்டது

எனினும், "நிஷா புயல்" காற்று எவரிடமும் எந்த அனுமதியும் பெறாமல் சாமத்தோடு சாமமாக மரங்களைத் தள்ளி முறித்து வீழ்த்தி சங்காரம் செய்தது. மரக்கூட்டுத்தாபனம் தான் என்ன செய்ய முடியும். நீதிமன்றில் வழக்கு வைத்தால் கூட புயல் காற்றை மன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிடும்.

நீதிமன்றத்திற்கு மரியாதை செலுத்தும் முகமாக ஒரு தடவை அங்கு செல்வோம் என புயல் காற்று நினைத்தால் நிலைமை எப்படி இருக்கும்.

ஆக,வழக்கு வைக்கக்கூட சந்தர்ப்பம் வைக்காமல் புயலும், மழையும் மரங்களை பதம் பார்த்தன. இதில் வேடிக்கை என்னவெனில் மழையால் , புயலால் எந்தப்பாதிப்பும் இல்லாத மரங்களும் தறிக்கப்பட்டமையாகும்.

இந்த சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பமே கிடையாது என முடிவு கட்டியவர்கள் வீழ்ந்த மரத்தை தறிப்பதற்கு முன்னதாக தலைநிமிர்ந்து நின்ற மரங்களை வெட்டிச் சரித்தனர். ஒரு புறத்தில் அவர்கள் புத்திசாலிகள் என்று கூட சொல்லலாம்.

கிராம சேவையாளர் , பிரதேச செயலகம், மரக்கூட்டுத்தாபனம் என்ற நீண்ட அலைச்சலை தவிர்க்க கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தினர்.

இதற்கு மேலாக லான்மாஸ்ரர் மற்றும் ரைக்டர்களில் தறிக்கப்பட்ட மரங்கள் நகர்த்தப்பட்டன. எந்தக் கேள்வியும் இல்லாமல் மரங்களை இடம் நகர்த்துவதற்கு கிடைத்த அரிய வாய்ப்புகள் கன கச்சிதமாகப்பயன் படுத்தப்பட்டது.



படம்: சுரேஸ்

### தாராளமாக கிடைத்த விறகு

புயலினால் யாழ். குடாநாட்டில் விழுந்த மரங்களை உரிமையாளர்களும் , மரக்கூட்டுத்தாபனமும் அகற்றுவதாக இருந்தால் குறைந்தது ஒரு வருடமாவது எடுத்திருக்கும். ஆனால் சூறாவளி ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டுவிட்டன.

யாழ்ப்பாணத்தில் உள்ள மரக்காலைகள் விழுந்த மரங்களை அப்படியே விலை நிர்ணயித்து பெற்றுக் கொண்டன என்பதற்கு அப்பால் "பொது சனங்கள்" தாமே கோடாரியைக் கொண்டு வந்து வெட்டி எடுத்துச்சென்றனர்.

வலிமையுள்ள வேறு சிலர் லான் மாஸ்ரரைக் கொண்டுவந்து அதில் ஏற்றிச் சென்றனர். என்னுடைய மரத்தை கொண்டுபோகிறார்கள் என்ற வேதனை எவரிடமுமே இருக்கவில்லை.

அட ! ஒரு புயல் யாழ்ப்பாணத்து மக்களை திருத்தி விட்டதா? என்று நீங்கள் யாரேனும் கேட்டால் அது தான் இல்லை. ஒரு மரத்தை வெட்டுவதற்குக் கூலியாகக் கேட்ட தொகை அந்த மரத்துடன் அயல் வீட்டு மரங்களையும் சேர்த்து விற்றாலும் போதாது என்றவாறு இருந்தது.

எனவே காசும் கொடுத்து மரத்தையும் கொடுக்க வேண்டிய இக்கட்டான நேரத்தில் காசு இல்லாமல் மரத்தை வெட்டி தாமே எடுத்துச் செல்வது பெரும் புண்ணியம் என்ற நினைப்பிலேயே எல்லாம் நடந்து முடிந்தது.

### அநாதையாகிய அரச மரங்கள்

விருட்சமாக நின்ற மரங்கள், வேரறுந்து வீதியில் விழுந்து கிடந்ததைப் பொறுக்க முடியாமல் அவற்றை நல்லடக்கம் செய்வதில் பலரும் ஈடுபட்டனர்.

என்.விஜயன்

இறந்தவர்களுக்கு அபரக் கிரியை செய்வது போல விழுந்த மரங்களுக்கு "கோடரிப்பூசை" செய்து சமயலறை யாககுண்டத்தில் அக்கினிப் பிரவேசம் செய்வதே வழமை.

அந்த வழமைக்கு அரச மரங்கள் விதி விலக்காகின. அரச மர விறகில் சமையல் செய்யக்கூடாது தென்னும் தொன்று தொட்டுவந்த வழமையை முறியடிக்கும் திராணி எவருக்கும் இருக்கவில்லை.

இதனால் அரச மரங்களின் அடக்கம் "பின்னர் அறிவிக்கப்படும்" என்பது போல சில நாட்கள் தாமதமாகின. இப்போது கூட அரச மரத்தின் எச்சங்கள் வீதியோரங்களில் விடப்பட்டுள்ளதைக் காணலாம்.

### வாழைமரங்களின் அழிப்பு

வாழைக்கும் தமிழர் வாழ்விற்கும் அநேக தொடர்பு உண்டு. அதனாலேயே கவிஞர் வைரமுத்து வாழைக் குத்தனியான கவி வரியை ஆக்கிப் போட்டார்.

வாழை கட்டி வாழ்வைத் தொடங்கும் பண்பாடு வாழைகட்டி வாழ்வை நிறைவு செய்யும் வரை நீடிப்பது அதிசயமான உண்மை.

வாழை இனத்தின் வகைமைப் பாட்டில் இந்த வேறுபாடு உணர்த்தப்படுகின்றபோதிலும் ஏனைய மரங்களை விட வாழைக்கு இருக்கக் கூடிய தனிச் சிறப்பு அதன் நன்றி மறவாமையாகும். ஆம், உலகத்தின் கண்ணுள்ள மரங்கள், செடிகள் அனைத்தும் பூப்பதும் காய்ப்பதும் கனியாய் உதிர்ப்பதும் தம் வம்சத்தின் பெருக்கத்திற்காக என்பதே உண்மை.




ஆனால் வாழை மரங்களோ குட்டிகள் ஈன்று தம் இனத்தைப் பெருக்கம் செய்த பின்னர் "குலை போடுகிறது" வம்சத்தைப் பெருக்கிய பின் குலை போடுவதால் வாழை இனத்திற்கு எந்த நன்மையும் கிடையாது. அவ்வாறாயின் வாழை குலைபோடுவதேனெனில் தன்னைப் பராமரித்து வளர்த்தவர்க்கு ஏதேனும் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நன்றி உணர்வினாலே ஆகும்.

தலையால் கனிதந்து தன் வாழ்வை முடிப்பது தான் வாழைக்கு இருக்கும் சிறப்பு. இதனாலேயே தமிழர் தம் வாழ்விலும், இழப்பிலும் வாழை கட்டும் மரபினைப் பின்பற்றினர்.

இத்தகைய நன்றிப்பெருக்குடைய வாழைகளுக்கு புயல் காற்றே மாரகனாக அமைந்தது பெரும் துரதிர்ஷ்டமே.

(வளரும்)

# கால்பந்து உலகின் கடவுள்; கொல்கத்தாவில் மரடோனா பெருமிதம்



(கொல்கத்தா)

கால்பந்து உலகின் ஜாம்பவான் மரடோனா நேற்று முன்தினம் கொல்கத்தா வந்தார். இந்திய கால்பந்து பயிற்சி அக்கடமியை ஆரம்பித்து வைத்த இவருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஆர்ஜென்டினாவின் முன்னாள் கால்பந்து வீரரும் தற்போதைய பயிற்சியாளருமான டீகோ மரடோனா 2 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

**பலத்த பாதுகாப்பு**

மும்பை தாக்குதலை அடுத்து மரடோனா இந்தியா வருவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதனால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

இரவு 9.30 மணியில் இருந்து ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. மரடோனா வந்தவுடன் பாதுகாப்புக்கு அமைக்கப்பட்டு இருந்த தடுப்புகளை தாண்டி ரசிகர்கள் வர முற்பட்டனர்.

மரடோனாவுடன் அவருடைய தோழி வெரோனிகாவும் வந்திருந்தார். ஏர்போர்ட்டில் இருந்து பிரமாண்ட பஸ்சில் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வழிநெடுகிலும் மரடோனா உற்சாகத்தில் கையசைத்துக் கொண்டே வந்தார். அவரைப் பார்த்து டீகோ டீகோஎன்று ரசிகர்கள் ஆரவாரமிட்ட னர்.

**வித்தியாசமான வரவேற்பு**

ஹோட்டலுக்கு சென்றபோது திடீரென தெருவிளக்குகள் அணைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தங்கள் கையில் இருந்த டோர்ச் லைட்களை ஒரே நேரத்தில் எரியவிட்டனர். அப்போது அங்கு வைக்கப்பட்டு இருந்த பனரில், மரடோனா எங்களது கடவுள். இதுவரை அவரைப்பற்றி கேள்விப்பட்டு இருக்கின்றோம். இப்போது அவரை நேரில் காண்கிறோம். அவர் எங்களை ஆசீர்வதிக்கிறார் என்று காண்பிக்கப்பட்டது.

**அடிக்கல் நாட்டு**

பின்னர் கொல்கத்தாவில் இருந்து தனி ஹெலிகொப்டர் மூலமாக மஹேஷ்தலா சென்றார். அங்கு இந்திய கால்பந்து அகடமிக்கு அடிக்கல் நாட்டினார். அப்போது மரடோனா கூறுகையில் எனது சொந்த நாடான ஆர்ஜென்டினா இங்கிருந்து அதிக தொலைவில் இருக்கிறது. ஆனால் இங்கு அதிக அளவில் கால்பந்து ரசிகர்கள் இருப்பார்கள் எனத் தெரியாது என்றார்.

**கால்பந்து உலகின் கடவுள்**

முன்பு கொல்கத்தா வந்திருந்த ஜெர்மனி வீரர் ருமேனிகே, பீலேயை விட மரடோனாதான் சிறந்த வீரர் என குறிப்பிட்டு இருந்தார். இது குறித்து மரடோனா கூறியதாவது;

ருமேனிகே தனது சொந்த கருத்தை தெரிவித்துள்ளார். எனது அம்மாவின் கருத்துப்படி நான் தான் உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர். 1986இல் இங்கிலாந்து அணிக்கெதிராக நான் அடித்த கோல் கடவுளின் கையால் அடிக்கப்பட்டது. அதுதான் என் வாழ்வின் சிறப்பான கோல். உலகில் கடவுள் ஒருவர்தான் எல்லோரும் என்னை கடவுளாக நினைக்கின்றனர். ஆனால் கடவுள் மற்றவர்களுக்கு உதவி செய்வார்.

நான் கால்பந்திற்கு உதவுகிறேன். இதனால் கால்பந்து உலகின் கடவுளாக என்னை கருதலாம். என்னுடைய இரு மகள் களுடன் அதிக அளவு நேரத்தை செலவிட முடியாமல் போனது வருத்தமான விடயம். ஆர்ஜென்டினா அணியின் முன்னாள் கால்பந்து பயிற்சியாளர் கார்லோஸ் முன்னாள் கியூபா அதிபர்பிடல் காஸ்ட்ரோ, இருவரும் என்னுடைய வாழ்க்கையில் மிகவும் உதவியாக இருந்துள்ளனர். இவ்வாறு மரடோனா கூறினார்.

**புஷ் மீது பாய்ச்சல்**

அமெரிக்க அதிபர் புஷ் குறித்து கடுமையாக விமர்சித்தார் மரடோனா. இவர் கூறுகையில், அமெரிக்க அதிபர் புஷ் செயல்கள் மனித உரிமையை பறிப்பதாக இருக்கிறது. இவரை கொலைகாரன் என குறிப்பிடலாம். ஒபாமா வெற்றியை வரவேற்கின்றேன் ஒபாமா இது போன்ற தவறுகளை செய்யமாட்டார் என நினைக்கிறேன் என்றார்.

# சென்னையில் தோனி; பாதுகாப்பு அதிகரிப்பு



(சென்னை)

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி சென்னை வந்தார்.

எதிர்வரும் 11-ம் திகதி இந்தியா-இங்கிலாந்து இடையில் முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் விதமாக இந்திய அணியின் தலைவர் தோனி சென்னை வந்தார்.

இவரது வருகையையொட்டி விமான நிலையம், இவர் தங்கும் விடுதி முன்பு கூடு தல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இன்று இந்திய அணி வீரர்கள் சென்னை வருகின்றனர்.

# ஒரு ஓட்டத்திற்கு 672 டொலர்கள்

(சிட்னி)

அவுஸ்திரேலிய வீரர்கள் பெறும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 672 டொலர் ஊதியம் கிடைப்பதாக அந் நாட்டு நாளிதழ் ஒன்று தெரிவிக்கிறது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஊதிய உயர்வுவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். அவுஸ்திரேலிய நாளிதழான டெய்லி டெலிகிராப், அவுஸ்திரேலிய வீரர்களின் சம்பளப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி வீரர்கள் பெறும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 672 டொலர் கிடைக்கிறது.

அதேபோல் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் வீழ்த்தும் ஒவ்வொரு விக்கெற்றுக்கும் 672 டொலர் கிடைக்கிறது. பல அவுஸ்திரேலிய வீரர்கள் இலட்சக்கணக்கான டொலர்கள் சம்பாதிப்பதாகவும் அந்த நாளிதழ் தெரிவிக்கிறது. (5)

# வீசப்படாத ஓவரில் 31 ஓட்டங்கள் வழங்கிய பாகிஸ்தான் பந்துவீச்சாளர்

(கராச்சி)

உள்ளூர் 'இருபது-20' தொடரில் பாகிஸ்தான் வீரர் ஜயித் மிர் மோசமான சாதனை படைத்துள்ளார். வேகப்பந்து வீச்சாளரான இவர் தொடர்ந்து 10 'நோ-போல்' வீசியுள்ளார். முறைப்படி ஒரு பந்துகூட வீசாத நிலையில் 31 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ரசிகர்களை திகைக்கச்செய்தார்.

பாகிஸ்தானில் பெனாசீர் பூட்டோ நினைவு 'இருபது-20' கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) நடத்தும் இந்த உள்ளூர் தொடரில் நாட்டின் பல்வேறு முக்கிய அணிகள் விளையாடி வருகின்றன. இதில் சமீபத்தில் நடந்த போட்டியில் முன்னாள் அணித் தலைவர் ரஷித் லத்திப் பயிற்சியளித்து வரும் போர்ட் காசிம் அணி விளையாடியது.

இப்போட்டியில் பந்துவீசிய அந்த அணியின் ஜயித் மிர், தொடர்ந்து 10 நோ-போல்களை வீசினார். 'இருபது-20' தொடரில் 'நோ-போல்' வீசினால் 'பிரீ-ஹிட்' உண்டு என்பதால் எதிரணி வீரர்கள் ஓட்டங் களைக் குவித் தனர்.

இதற்கு மேலும் பந்துவீசினால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்த இவர் காலில் காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அவரது பரிதாபமான நிலைமையைப் பார்த்த நடுவர் சலீம் படர், டிரஸிங் ரூமுக்கு அனுப்பி வைத்தார். (5)

# மேற்கிந்திய அணியின் உபதலைவராக ராம்டீன் தேர்வு



நியூசிலாந்துடனான ஒருநாள் மற்றும் இருபது-20 தொடர்களுக்கான மேற்கிந்திய அணியின் உப தலைவராக விக்கெட்காப்பாளர் டினேஷ் ராம்டீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி டுண்டனில் ஆரம்பமாகிறது. இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையிலான இரண்டு இருபது-20 போட்டிகளும் 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதில் அண்மைக்காலமாக மேற்கிந்திய அணியில் இடம்பிடிக்கவே தடுமாறிவந்த டினேஷ் ராம்டீன் அணியின் உபதலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ராம்டீன் இதுவரை 33 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளை யாடி ஒரே ஒரு அரைச்சதத்தை மட்டுமே பெற் றுள்ளார். அவரது ஓட்ட சராசரி 14.11 மாத்திர மாகும்.

**அணி விபரம்**

எக்ஸ்வியர் மார்ஷல், கிறிஸ் கெயில் (தலைவர், ராம் நரேஷ் சர்வான், ஷிவ்னாரின் சந்தர்போல், செவ்னாரின் சித்தகூன், கிரோன் பொல்லார்ட், ஷோன் பின்ட்லே, டினேஷ் ராம்டீன் (வி.கா), கார்டன் பவ் (வி.கா) பிடெல் எட்வட்ஸ், பிரெண்டன் நாஷ், நிகிடா மில் லர், டெரன் பவல், ஜெரமி டைலர், லயன் பெகர், சுலைமான் பென் (இருபது-20 தொடருக்கு மாத்திரம்)

# இலங்கை டெஸ்ட் அணியில் இணைக்கப்பட்ட சமிந்த வாஸிற்கு ஒருநாள் அணியில் இடமில்லை

பங்களாதேஷில் நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியில் இருந்து முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் நீக்கப்பட்டுள்ளார்.

எனினும் பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் வாஸுக்கு இடம் கிடைத்துள்ளது.

சிம்பாப்வே சுற்றுப்பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ள இலங்கை அணி அடுத்து பங்களாதேஷிற்கு பயணமாகவுள்ளது.

இலங்கை -பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து இலங்கை பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகள் மோதும் முக்கோண ஒருநாள் தொடர் ஜனவரி 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த தொடர்களுக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சிம்பாப்வே ஒருநாள் தொடரில் ஓய்வு எடுத்துக்கொண்ட சமிந்த வாஸுக்கு ஒருநாள் அணியில் இடம் கிடைக்கவில்லை. எனினும் சிம்பாப்வே தொடரில் சோபிக்க தவறிய மஹேல உடவத்த நீக்கப்பட்டு சனத் ஜெயசூரிய மீண்டும் அணியில் இணைக்கப் பட்டார்.

அதேபோன்று வேகப்பந்து வீச்சாளர் நுவன் குலசேகர பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடருக்கான அணியில் இருந்து நீக்கப்பட்டார். பதிலாக தில்ஹார பெர்னாண்டோவுக்கு டெஸ்ட் அணி யில் இடம் கிடைத்தது.

இளம் வீரர் அன்ஜேலோ மத்தியூஸ் மற்றும் திலின கண்டம்பி ஆகியோர் ஒரு நாள் அணியில் தமது இடத்தை தக்கவைத்துக் கொண்டனர்.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆகிய இரண்டு அணிகளிலும் 5 வேகப்பந்து வீச்சாளர்கள் இணை க்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.



இதில் சிம்பாப்வே தொடரிலிருந்து நீக்கப் பட்ட டி.எம்.டில்ஷானுக்கு டெஸ்ட் அணியில் இடம் கிடைத்துள்ளது. ஆனால் மற்றுமொரு மத்திய வரிசை வீரரான சாமர சில்வாவுக்கு தொடர்ந்து இலங்கை அணியில் இடம் கிடைக்க வில்லை.

**டெஸ்ட் அணி**

மலிந்த வர்ணபுர, மைக்கல் வென்டோட், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன (தலைவர்), திலான் சமரவீர, திலகரத்ன டில்ஷான், பிரசன்ன ஜெயவர்த்தன (வி.கா), சமிந்தவாஸ், முத்தையா முரளிதரன், அஜந்த மெண்டிஸ், தம்மிக்க பிரசாத், சாமர கபுகெதர, பர்வீஸ் மஹ்ரூப், தில்ஹார பெர்னாண்டோ, திலான் துஷார.

**ஒருநாள் அணி**

சனத் ஜெயசூரிய, உபுல் தரங்க, குமார் சங்கக்கார (வி.கா.), மஹேல ஜெயவர்த்தன (தலைவர்), சாமர கபுகெதர, ஜெஹான் முபாரக், திலின கண்டம்பி, முத்தையா முரளிதரன், அஜந்த மெண்டிஸ், தில்ஹார பெர்னாண்டோ, நுவன் குலசேகர, பர்வீஸ் மஹ்ரூப், தம்மிக்க பிரசாத், திலான் துஷார, அன்ஜலோ மத்தியூஸ். (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# சென்னை மெரீனா கடற்கரையில் கண்டனக் கவிதைப் போராட்டம்

(சென்னை)

இலங்கையில் நடைபெற்று வரும் இன அநீதிகளைக் கண்டித்து சென்னை மெரீனா கடற்கரை காந்தி சிலைக்கு அருகில் கவிஞர் இன்பா சுப்பிரமணியம் தலைமையில் சுமார் 200க்கும் மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டு கண்டன கவிதையை வாசித்தனர்.

இந்த கண்டன கவிதை போராட்டத்தில் கவிஞர் கனிமொழி, கவிஞர் தமிழச்சி,கவிஞர் சுகிர்தராணி, கவிஞர் இன்குலாப், கவிஞர் ஜெயபாலன்; கவிஞர் லீலா மணிமேகலை உள்ளிட்ட பல முன்னணி படைப்பாளிகள் கலந்து கொண்டு தங்கள் கவிதை மூலம் இலங்கை அரசிற்கு கண்டனத்தை தெரிவித்தார்கள்.

இந்த போராட்டம் குறித்து பேசிய கவிஞர் லீலா மணிமேகலை, இலங்கையில் நடைபெறும் இன அழித்தொழிப்பு நடவடிக்கையினை நிறுத்துவதற்காக முதலில் சமாதானத்திற்கான உரையாடலைத் தொடங்க வேண்டும்.

அதன் முன் அங்கு போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். நியாயமான அரசாக இலங்கை அரசு நடந்து கொள்ளாததால் அங்கு நிலவி வரும் இனப் பிரச்சினை உள்நாட்டு பிரச்சினை என்ற எல்லையை தாண்டி சர்வதேச பிரச்சினையாக மாறி விட்டது என்றார்.

(ச-5)

# நாடாளுமன்றம் நாளை கலைக்கப்படுமா? கொழும்பு அரசியலில் பரபரப்புப் பேச்சு

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை அன்று கலைக்கப்படும் என்ற ஊகங்கள் நேற்று அரசியல் தரப்புகளில் பேசப்பட்டன. ஆயினும் இந்த ஊகத்தை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ எவரும் முன்வரவில்லை.

எனவே ஜனாதிபதி தமது திட்டங்களை முன்னெடுத்துச்செல்லும் வகையில் நல்ல நாளாக சோதிடர்களால் கூறப்பட்டுள்ள டிசம்பர்மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமையை கருத்திற்கொண்டே இந்த ஊகம் வெளியிடப் பட்டுள்ளது.

ஊகங்களின் அடிப்படையில் நாளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று நடைபெறவுள்ள வரவுசெலவுத் திட்டத்தில் வெற்றி பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் வன்னியில் தொடரும் இராணுவ வெற்றிகளும் தற்போது நாடாளுமன்றத்தை கலைத்தால் தமக்கு சாதகமாக இருக்கும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(எ-5)

# அரியநேந்திரன் எம்.பி நாட்டை விட்டு வெளியேறத் தடை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் நேற்று ஞாயிறு காலை தான் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில் நாட்டை வெளியேற குடிவரவு,குடியகல்வு திணைக்களத்தினால் அனுமதி மறுக்கப்பட்டது என கூறியுள்ளார்.

தான் ஏற்கனவே தீர்மானித்தபடி வைத்திய சிகிச்சைக்காக செல்லவிருந்ததாகவும் ஆனால் நாட்டை விட்டு வெளியேற அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாமல் திரும்பியதாகவும் தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் அனுமதி மறுத்த அதிகாரிகள் தன்னை குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் அழைத்துச் சென்றதாகவும் அங்கிருந்த குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி இது மேல் இடத்து உத்தரவு என தனக்குத் தெரிவித்ததாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, நேற்றுக் காலை 6 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்ற வேளையில் எனது கடவுச்சீட்டை பரிசீலித்த குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர் என்னை சம்பந்தப்பட்ட அதிகாரி தரத்திலான இன்னுமொரு குடிவரவு குடியகல்வு அதிகாரியிடம் அழைத்துச்சென்றார்.

என்னை 15 நிமிடங்கள் இருக்க வைத்து விட்டு திரும்பவும் அவர் மீண்டும் ஒரு இடத்திற்குக் கூட்டிச் சென்றார்.

அங்கிருந்த குற்றப்புலனாய்வு அதிகாரி தரத்திலான செயற் திட்ட அதிகாரி நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல அனுமதிக்க முடியாது என்று, தங்களுக்கு எழுத்து மூலமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கடிதம் வழங்கப்பட்டிருப்பதாக என்னிடம் கூறினார் என்றார்.

(ச-5)

# அரசாங்கத்துக்கு எதிராக...

நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தே இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த ஹெட்ஜின் உடன்படிக்கை விடயத்தில் அரசாங்கம், அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் அசந்த டி மெல் ஆகியோர் மீது குற்றச்சாட்டை சுமத்த முயலும் அதே நேரம் அமைச்சர் கடந்த நாடாளுமன்றத்தில் இந்த உடன்படிக்கைக்கு முழு அமைச் சரவையும் பொறுப்பு என குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க முன்வந்துள்ளது. இதேவேளை அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஒரு விவாதத்தை கோரியுள்ளது.

(எ-5)

# கிழக்கு மாகாண...

பாணம் ஆகிய இடங்களில் மழை பெய்து கொண்டிருந்தது.

இதேவேளை யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணி வரை 59.3 மி.மீற்றர் மழை பெய்துள்ளதாக யாழ்.வளி மண்டலவியல் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

தாழமுக்கம் தற்போது குறைவடைந்துள்ளதுடன் காற்றுடன் மழை அவ்வப்போது பெய்யும் வாய்ப்பு உள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சனிக்கிழமை நண்பகல் பொலிஸாரும் அரசாங்க அதிகாரிகளும் யாழ்.குடாவின் கரையோர பகுதிகளை சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லு மாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து மாலை நேரம் வடமராட்சி, தென்மராட்சி, நாவாந்துறை, குருநகர்,பாசையூர், கொழும்புத்துறை பகுதியைச சேர்ந்த கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கி விட்டு நேற்றுக் காலையில் தமது இடங்களுக்கு திரும்பினர்.

(ச-5)

# பிரணாப்...

இலங்கை அரசாங்கம் உடன்பட வாய்ப்பில்லை. இதனை இந்திய அரசாங்கமும் உணர்ந்துள்ளது.

எனவே நிலைமைகளை சமாளிக்கும் வகையில் ஏதாவது ஒரு இராணுவ வெற்றியை பெறுவதில் இலங்கை அரசாங்கம் முயன்று வருகிறது.

இதன் காரணமாக கடந்தவாரம் முதல் வன்னியில் இராணுவ முனைப்புக்களை அது அதிகரித்துள்ளதாக த நேசன் தெரிவித்துள்ளது.

(ச-5)

# கொழும்பில்...

முகவரிகளும் பதிவு செய்யப்பட்டதுடன் ஏற்கனவே பொலிஸார் வைத்திருந்த புத்தகம் ஒன்றில் பதிவு செய்திருந்த அடையாள அட்டைகளின் இலக்கங்களும் முகவரிகளும் ஒப்பிட்டு பரிசோதிக்கப்பட்டன.

அத்துடன் கையடக்கத் தொலைபேசி இலக்கங்களும் பதிவு செய்யப்பட்டன. பொலிஸார் ஏற்கனவே வைத்திருந்த வேறு கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை காண்பித்து இந்த இலக்கங்கள் தொடர்பாக எதுவும் தெரியுமா எனவும் கேட்கப்பட்டது.

குறித்த பிரதேசங்களில் வீதியால் நடந்து சென்றவர்களும் வாகனங்களில் சென்றவர்களும் வழி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். ஆனால் எவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படவில்லை.

இந்த சோதனை நடவடிக்கையின் போது பெருமளவிலான படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கடும் மழைக்கு மத்தியிலும் இந்தச் சோதனை நடவடிக்கை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எ-5)

# புலிகளுடன் யுத்த நிறுத்தத்...

கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ஒப்சேவர் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் தற்போது நடைபெறும் போரில் அப்பாவி தமிழ் மக்கள் யாரும் துன்புறுத்தப்படவில்லை என்று இந்தியாவிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா உதவ வேண்டுமென்று கோருகின்றோம்.

நாட்டின் கிழக்குப் பகுதி, இராணுவ நடவடிக்கையால் விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் எங்களுடைய திறமை சிறப்பாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

இதே அணுகுமுறையைத்தான் வன்னிப் பகுதியை மீட்பதிலும் இராணுவம் மேற்கொண்டுள்ளது. ஆனால் தமிழகத்தைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் புதுடில்லியில் உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தின் மீது குற்றம் சுமத்துவதில் ஈடுபட்டுள்ளமை கவலையளிக்கிறது.

எனினும் இந்தியா இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காது என்று நம்புகிறோம்.

விடுதலைப் புலிகளுடன் இலங்கைப் படைகள் போர் நிறுத்தம் செய்வதில் இந்தியா எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில்தான் விடுதலைப் புலிகளை இந்தியா வைத்துள்ளது.

புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை குற்றவாளியாக ஏற்கனவே இந்தியா அறிவித்துள்ளது. மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதலுக்குப் பின் இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தியா தனது நிலையைத் தெரிவித்துள்ளது.

எனவே புலிகளுக்குச் சாதகமான நிலை எதுவும் இந்தியத் தரப்பில் ஏற்படப்போவதில்லை. விடுதலைப் புலிகளுடனான போரில் பீரங்கிகளின் தாக்குதலில் 16 ஆயிரம் வீரர்கள் காயமடைந்தனர்.

இவர்களில் 10 ஆயிரம் பேர் சிகிச்சைக்குப் பின் மீண்டும் களம் திரும்பியுள்ளனர்.

தற்போதைய போரில் கிளிநொச்சியைக் கைப்பற்றியபின் முல்லைத்தீவுப் பகுதியையும் மீட்பது உறுதி என்றார் பொன்சேகா.

தமிழ்நாட்டு 'அரசியல் ஜோக்கர்கள்' இலங்கையில் போரை நிறுத்துமாறு கோருவதை காங்கிரஸ் அரசாங்கம் செவிமடுக்காது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால் தமிழகத்தில் நெடுமாறன் மற்றும் வைகோ போன்ற அரசியல்வாதிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கிடைக்கும் வருமானங்கள் குறைந்துவிடும்.

இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் கவனமான செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாகவே அது வன்னியில் உள்ள பொதுமக்களுக்கு தமது நிவாரணங்கள் சென்று சேர வேண்டுமென்பதில் கவனமாக இருந்தது என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

(எ-5)

# முள்ளியவளை...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலின் போது முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் மிகப் பெரிய கட்டடத் தொகுதியும் அதனையண்டிய பகுதியில் உள்ள மூன்று வீடுகளும்முற்றாக சேதம் அடைந்துள்ளன.

கல்லூரியின் ஏனைய கட்டடத் தொகுதிகளும் மேலும் பத்துவீடுகளும் சிறு சேதங்களுக்குள்ளாகி உள்ளன 12 கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளதுடன் பயன்தரு மரங்களும் அழிந்துள்ளன. அத்தோடு இத்தாக்குதலின் போது மூன்று பேர் காயமடைந்தும் உள்ளனர்.

(எ-5)

# போதனா...

இந் நடைமுறை பின்பற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கை வைத்தியர்களின் பாதுகாப்புக் கருதி யாழ்.போதனா வைத்திய சாலையைச் சூழவும் பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-49)


வர்த்தகப் பிரிவு

விடுமுறைக்கால வகுப்புக்கள்

DMI

A/L 2009, 2010

திங்கள், புதன், வெள்ளி

| நேரம் | ஆசிரியர்கள் | |
|---|---|---|
| | நாவலர் வீதி | ஸ்ரான்லி வீதி |
| 8.00 - 9.30 | S.S.சிறி | B.பசில் |
| 9.30 - 11.00 | B.பசில் | D.Sam |
| 11.00 - 12.30 | D.Sam | S.S.சிறி |

(C-1837)

கலைப் பிரிவு

விடுமுறைக்கால வகுப்புக்கள்

சனி, ஞாயிறு நேர அட்டவணைப்படி

திங்கள், புதன், வெள்ளி

தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்

DMI

நாவலர் வீதி,

யாழ்.

(C-1836)

கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான 12 நாள்கள் பயிற்சி

•கூந்தல் அலங்காரங்கள் •Facials •மண அலங்காரங்கள்,Fabric -Painting •கைவேலை •பூவேலை •சாறி பிளவுஸ்கள், சுரிதார் தைத்தல் •25 நாட்கள் Saree work பயிற்சிகள்.

☆ சனி, ஞாயிறு பிரிவு டிசம்பர் 9-ம்,12-ம் திகதி பொது விடுமுறைகளிலும் தொடர்ந்து சனி,ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

☆ கிழமை நாள் பிரிவு இன்று (08.12.2008) ஆரம்பமாகி கிழமை தோறும் இரு நாட்கள் பயிற்சிகளாக நடைபெறும்.

✦ மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

☞ மேலும் விபரங்களை தினமும் பி.ப.2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- பதிவாளர்

(C-1835)

TUITION

GENERAL ENGLISH PERSONAL CLASSES

Experienced English Medium Graduate Grade Six and above.

T.SRI RAMANATHAN

91/10,-Hindu Ladies Lane, Kanthermadam, Jaffna.

Contact 5.00 p.m-7.00 p.m

(C-1831)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.